மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 7 – 56

★

அணா 4

★



ஆங்கிலப் பேராசிரியரைப் பற்றி

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, இப்பொழுது அக்கல்லூரியின் முதல்வராக இருக்கும் தோழர் ஆர். கிருட்டினமூர்த்தி (அய்யர்) அவர்கள் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து வந்தார். அவரது நடை உடை நடிப்புக்களெல்லாம் இப்பொழுது எப்படியிருக்கின்றனவோ அப்படியேதான் அப்பொழுதும் இருந்துவந்தன.

பேராசிரியர் கிருட்டினமூர்த்தி என்றால், அவரைச் சில மாணவர்கள் அச்சத்தோடு தொலைவிலேயே நின்று பார்ப்பார்கள், சிலர் அச்சத்தைச் சிறிதுவிட்டு அடக்கத்தோடு நெருங்கி நின்று பார்ப்பார்கள், வேறுசிலர் அச்சத்தை அறவேவிட்டு அடக்கத்தோடு அவரிடம், நெருங்கிப் பழக முற்படுவார்கள், மற்றுஞ்சிலர் அடக்கத்தையும் விட்டுத் தோழமையுணர்ச்சியோடு நெருங்கிப்பழகுவார்கள். பொதுவாக இந்த நான்குவகையில் அவருக்கும் மாணவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படும்.

பச்சையப்பன் கல்லூரியில் முதல்வகுப்பில் சேரும் மாணவர்கள், நான்காம் வகுப்பை முடிப்பதற்குள் மேற்சுட்டிக்காட்டப்பட்ட நான்குவகையில் பேராசிரியர் கிருட்டினமூர்த்தி அவர்களோடு தொடர்புகொள்வது இயல்பாக இருக்கும். காரணம் என்ன என்றால், கல்லூரிக்கு முதன்முதலாகவந்து முதல் வகுப்பில் சேரும் மாணவர்கள் பேராசிரியரின் அதட்டல், உருட்டல், மிரட்டல் முதலிய 'தர்பார்' நடவடிக்கைகளைக்கண்டு அச்சப்பட்டுப்போவார்கள். முதல் வகுப்பில் அவர் நடத்தும் 'தர்பார்' நடவடிக்கைகள், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது—ஆனர்சு வகுப்புக்களில் முறையே சிறிது சிறிதாகக் குறைந்தே காணப்படும். இறுதிவகுப்பு மாணவர்களோடு அவரும் சர்வசாதாரணமாகப் பழகுவார்; மாணவர்களும் ஆண்டுக்கு ஆண்டு அச்சத்தைக் குறைத்துக்கொண்டு தோழமையுணர்ச்சியோடு அவருடன் பழக முற்பட்டு விடுவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நிலையைப் பேராசிரியர் கிருட்டினமூர்த்தி அவர்கள் முன்னிலையிலேயே ஒருமுறை உணர்த்திவிட்டார்கள். அண்ணா அவர்கள் இறுதிவகுப்பை முடிக்குந்தறுவாயில், ஆசிரியர்களுக்கு அண்ணாவும் பிற மாணவர்களும் சேர்ந்து நடத்திய தேநீர் விருந்துக் கூட்டமொன்றில், அண்ணா அவர்கள் பேசும்போது, ஒவ்வொரு ஆசிரியரைப்பற்றியும் வேடிக்கையாகப்பேசிக்கொண்டுவரும் போது, பேராசிரியர் கிருட்டினமூர்த்தி அவர்களைப் பற்றிக்குறிப்பிட்டுப் பேசும்படி நேர்ந்தது. அப்பொழுது அண்ணாஅவர்கள் "பேராசிரியர் கிருட்டினமூர்த்தி முதல் வகுப்பில் சர்வாதிகாரியாகவும், இரண்டாவது வகுப்பில் குடியாட்சிக்கோனாகவும், மூன்றாவது வகுப்பில் குடியரசுத் தலைவராகவும், நான்காவது வகுப்பில் தோழராகவும் விளங்குகிறார்" [Prof. Kirshnamurthy is Dictator in the I U.C., Constitutional Monarch in the II U.C., Republican President in the III U.C. and Comrade in the IV U. C.] என்று குறிப்பிட்டார்கள். கூடியிருந்த எல்லோரும் ஆரவாரம் செய்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்; பேராசிரியர் கிருட்டினமூர்த்தி அவர்களும் வழக்கம்போல் எல்லோரோடும் சேர்ந்து சிரித்து மகிழ்ந்தார்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 ★ (15—7—56) ★ இதழ் 6

மும்முனைப் போராட்ட நாள்

சூலைத் திங்கள் 15-ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவுநாள் ஆகும்! அந்த நாள் முன்னேற்றக் கழகத்தவர்க்கு உரிமை வேட்கையைக் கிளரிவிடும் நாளாகவும், உணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டும் நாளாகவும், செயலாற்றும் கடமையை உணர்த்தும் நாளாகவும் அமைந்திருக்கிறது!

1953-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15-ஆம் நாளன்றுதான் திராவிட முன்னேற்றக்கழகம் உரிமை கோரி, மூன்று முனைகளிலே நின்று தன்மான அறப்போரைத் தொடுக்க வேண்டி நேரிட்டது. கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் ஆறு தோழர்கள் அரசாங்கத்தாரின் அத்துமீறிய அடக்குமுறைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகும்படியும், நூற்றுக் கணக்கான தோழர்கள் படுகாயம் ஏற்கும்படியும், நாடெங்கணும் ஆயிரக்கணக்கான தோழர்கள் தடியடிக்கு ஆளாகும்படியும், கழகத்தின் முன்னணியினரும், பிறருமாகச் சேர்ந்து சுமார் ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சிறைத் தண்டனை ஏற்கும்படியும், ஆயிரக்கணக்கான தோழர்கள் தங்கள் உடைமைகளை அரசாங்கத்திடம் பறி கொடுக்கும்படியும் ஆன பல்வேறு வீரச் செயல்கள் அந்த மும்முனைப் போராட்டத்தை ஒட்டியே எழுந்தன; அவை கழகத்துக்கு நல்லாக்கமும், உறுதியும், வளர்ச்சியும் தந்தன. அந்த நாளில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கம் செய்யும் நன்னாளாக இந்நாளைக் கொள்வோமாக!

திராவிடத்தைப் பல்வேறு வகையிலும் அழுத்தியும், தாழ்த்தியும் வரும் வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தின் சின்னமாக இருந்து, அடாத ஆணவ மொழி கூறிய பண்டித நேருவுக்குத், திராவிடத்தின் விடுதலை இயக்கமாகத் திராவிட முன்னேற்றக்கழகம் வளர்ந்து வரும் செய்தியை உணர்த்தவும், அதன் ஆற்றலை அறியப்படுத்தவும், உலகோர்க்குக் கழகத்தின் விடுதலை வேட்கையைத் தெரியப்படுத்தவும், இந்திய சர்க்காரால் ஓட்டப்படும் இரயிலைச் சில விநாடிகள் ஆங்காங்கு அந்த நாளில் மட்டும் நிறுத்துவதை ஒரு முனையில் செய்யப்படும் அறிகுறிப் போராட்டமாகக் கழகம் கொண்டது.

கல்லக்குடி என்ற இடத்தில் அமைந்துள்ள 'டால்மியாபுரம்', பொதுவாகச், சிமெண்ட் தொழிற்சாலைக்கான அனுமதிபெற்ற வகையில் வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தின் சின்னமாகவும், பெயர்பெற்ற வகையில் வடநாட்டுமொழி ஆதிக்கத்தின் சின்னமாகவும், சிறப்பாகப் பொருள்சுரண்டும் வகையில் வடநாட்டுப் பொருளாதார ஆதிக்கத்தின் சின்னமாகவும் விளங்குவதால், அந்த ஆதிக்கங்களை விடுதலை வேட்கைகொண்ட தி. மு. கழகம் எதிர்க்கிறது என்பதை இந்திய அரசியலார்க்கும், வடநாட்டு வணிகக் கோமான்களுக்கும், நாட்டவர்க்கும் தெரிவிக்கவேண்டியே 'டால்மியாபுரம்' என்ற பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றும் போராட்டத்தை, மற்றொரு முனையில் மேற்கொள்ளும் அறிகுறிப் போராட்டமாகக் கழகம் கொண்டது.

சமூகத்துறையில் பன்னெடுங்காலமாக ஏற்படுத்தப்பட்டு வரும் பிளவுகளையும், வேற்றுமைகளையும் காப்பாற்றும் வகையிலும், பின் தள்ளப்பட்ட—தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் முன்னேறவொட்டாமல் தடுக்கும் வகையிலும் ஆச்சாரியாரால் புகுத்தப்பட்ட ஆரம்பக்கல்வித்திட்டத்தைக் கழகம் எதிர்க்கிறது என்பதைச் சென்னை அரசியலார்க்கும், நாட்டவர்க்கும் உணர்த்தவேண்டி ஆச்சாரியார் வீட்டிற்குமுன் மறியல் நடத்துவது என்னும் அறப்போராட்டத்தை, வேறொரு முனையில் மேற்கொள்ளும் அறிகுறிப்போராட்டமாகக் கழகம் கொண்டது.

இரயில் நிறுத்தப் போராட்டம் எந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கம் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது; ஆச்சாரியாரின் கல்வித்திட்டம் அகற்றப்பட்டது; நமது நோக்கம் ஈடேறிற்று. 'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி' என்று நாம் மாற்றினோம்; ஆனால் அரசாங்கம் சட்டப்படி மாற்ற இன்னமும் முனையவில்லை. மாற்றும் காலம் வரையில் விடுதலை வேட்கையுணர்ச்சி மூட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும். அப்படி மாற்றப்படும் 'கல்லக்குடி', மாற்றப்படவேண்டிய பல ஊர்களுக்கு முன்எடுத்துக் காட்டாக விளங்கும்.

தமிழகப் பகுதிகளைத் தமிழ் நிலத்துடன் இணைக்கவும், இலங்கைத் தமிழர்களின் அவதிகளைத் துடைக்கவும், நேரிய சனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்தவும், திராவிடக் கூட்டாட்சியைக் காணவும் மும்முனைப் போராட்ட நாளில் நினைவு படுத்தப்படும் உணர்ச்சி, எதிர்காலத்தில் நமக்குப்பெரிதும் பயன்படுவதாக!

கருத்துக் கதிர்

உண்மையான கடவுள்

“கோவிலில் சென்று நீங்கள் வணங்கும் கடவுள் கண்ணால் காணமுடியாதது; உண்மையான கடவுள்-இரத்தமும், சதையும் கொண்ட கடவுள் - உடனடியாகக் கவனிக்கவேண்டிய கடவுள் நம் கண் முன்பே இருக்கிறது. பட்டினியால் வாடும் இலட்சக்கணக்கான மக்களுக்குப் பணிசெய்வதே கடவுளுக்குச் செய்யும் பணியாகும்,”

—என்று விநோபா பாவே உழுதமங்கலம் சிற்றூர் மக்களிடத்தில் 26-6-56 இல் பேசும்போது கூறியுள்ளார்

* * *

மொழிச் சிக்கல் ஏற்படும்

“தென்னாட்டில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிவழி மாநிலங்கள் தனித்தனியே இயங்குவதோடு, தமது பொதுநலத்திற்கென்று ஒரு கூட்டாட்சி அமைத்துக் கொள்வதே ‘தட்சிணப் பிரதேசம்’ என்றால், அது ஏற்கத்தக்கதே. அவ்வாறில்லாமல் ‘தட்சிணப்பிரதேசம்’ என்பது பலமொழிபேசும் ஒரு மாநிலம் என்றால், அது மொழிச் சிக்கலைக்கிளப்பும்...நமது தாய்மொழிக்கு முதலிடமும் ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடமும் கொடுப்பதே பொருந்தும். இந்தியாவிலுள்ள எல்லா வட்டார மொழிகளையும் முறையாகப் பேரரசின் மொழியாக்காவிட்டால், பிளவு ஏற்பட்டு நாடு சிதறுண்டு போவது திண்ணம். நாடு அடிமையுற்றிருந்த போது பிறந்து வளர்ந்துள்ள இப்போதுள்ள ‘தலைமுறை’ இதை ஒருவாறு பொறுத்தாலும், பின்னர்வரும் ‘தலைமுறை’ இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது,”

—என்று தோழர் கருமுத்து தியாகராசர் அவர்கள் சேலத்தில் திருக்குறள் கழகக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

* * *

ஆங்கிலத்தின் இன்றியமையாமை

“உலகில் ஆங்கிலம் பேசாத மற்ற நாடுகளிலெல்லாம், ஆரம்பக்கல்விக் கட்டத்திலேயே வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆகையால் இந்தியச் சிறுவர்கள் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவேண்டியது மிக இன்றியமையாததாகும். ஆறாவது வகுப்புக்குமேல் தாய் மொழியோடு ஆங்கிலத்தையும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்.”

—என்று ஒரிசா கல்வியமைச்சர் தோழர் இராதாநாத்ராத் 24-6-56 இல் கட்டாக்கில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

* * *

உருசியாவுக்கு ‘ஆமாம்’ போட வேண்டாம்

“சோசலிசத்தை அடைவதற்கு இத்தாலிய நாட்டுக் கம்யூனிசுட்டுக்கள் தாங்களாகவே ஒரு வழி ‘இத்தாலிய வழி’ காண்பதில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்; சுயமாகச் சிந்தித்து வழி காணவேண்டும். ஸ்டாலின் காலத்திய தவறுகளுக்கு, இன்று அவரைச் சுட்டிக்காட்டிக் குறைபேசுபவர்களும் கூட்டுப் பொறுப்பாளிகள்தான்...இப்போது உருசியா கம்யூனிசுட்டுக்கட்சிக்கும், இதர நாடுகளில் உள்ள கம்யூனிசுட்டுக்கட்சிகளுக்கும், இருக்கவேண்டிய உறவுகள் புதிய வெளிச்சத்தில் உறுதி செய்யப்படவேண்டும். உலகக்கம்யூனிசுட்டு முறை இனி சோவியத் உருசியாவின் அனுபவங்களை மட்டும் கணக்கில் எழுதிக்கொண்டு உருவாக்கப்படக்கூடாது; மாறாகப் பல்வேறு நாடுகளின் அனுபவங்களையும் கணக்கில் கொண்டு உறுதி செய்யப்படவேண்டும்,”

—என்று இத்தாலிய கம்யூனிசுட்டுக் கட்சித் தலைவர் தோக்லியாட்டி கூறியுள்ளார்.

* * *

கறைகளும் குறைகளும்

“மனிதஇனத்தின் நலிவு காரணமாக வாழ்க்கையில் கறைகளும், குறைகளும் எல்லாத் துறைகளில் உள்ளவர்களிடமும் காணப்படுகின்றன. ஆனால் கலைஞர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படுவதாகக் கருதப்படும் குறைகளை மட்டுமே பெரியதாகச் சுட்டிக்காட்டி அவர்கள்மீது களங்கம் கற்பிக்க முற்படுவது

சிறிதும் நீதியல்ல. அத்தகைய கறைகளையும், குறைகளையும் ஒன்றுக்குப் பத்தாகச் சுட்டிக் காண்பிப்பதால் என்ன பயன்?

—என்று டைரக்டர் வி. சாந்தாராம் சென்னையில் குறிப்பிட்டுள்ளார்.

* * *

அறிவு தெளிவுபெறுகிறது

"தென்னாடு தொழில்துறை வளர்ச்சியில் (வடநாட்டைவிட) மிகப் பின்தாங்கிக் கிடக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது. இது வெறும்பிரச்சாரத்திற்காக எழுப்பப்படும் 'முழக்கம்-சுலோகம்' அல்ல. மாறாக மத்திய நிதியமைச்சரே ஒப்புக் கொண்டுள்ள மறுக்கமுடியாத, அசைக்க இயலாத உண்மையாகும்."

—என்று நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் 7-7-57இல் தூத்துக் குடியில் பேசும்போது சொல்லியுள்ளார்.

* * *

வடநாட்டவரே உணருகிறார்

"தென்னாட்டிற்கு ஒதுக்கப்படும் குறைந்த அளவு உருக்குக் 'கோட்டா'க்களைக்கூட அனுப்பிவைப்பதற்கு இரயில் வசதி கிடைப்பதில்லை. இப்பகுதியில் இரயில்வே போக்குவரத்தை வளர்ச்சியடையச்செய்யத்தென்னாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் டில்லி ஆட்சியிடம் வற்புறுத்த வேண்டும். தென்னாட்டில் 'மீட்டர்கேஜ்' பிரிவை, 'பிராட் கேஜ்' பிரிவாக மாற்றுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்"

—என்று தூத்துக்குடி இரும்புவர்த்தகச் சங்க வெள்ளிவிழாவிற்குத் தலைமை தாங்கிய டாட்டா இரும்புக் கம்பெனி விற்பனைப் பொறுப்பாளர் தோழர் கே. ஜே. கிளீட்டசு 7-7-56இல் குறிப்பிட்டுள்ளார்.

* * *

தாய் மொழியே ஆட்சிமொழி ஆக வேண்டும்

"மொழிவாரி மாநில அமைப்பு மக்களுக்கு நல்லதுதான். அம்மாதிரி மொழிவழி மாநிலங்கள் அமையாவிட்டால், உண்மையான சுதந்திரம் நாட்டில் இல்லையென்றுகூடச் சொல்வேன். குடியானவர் பேசும் மொழியில் வழக்கு மன்றத்தில் குறிப்புக்கள் எழுதப்படாவிட்டால், தீர்ப்புக்கள் வழங்கப்படாவிட்டால் உண்மைச் சுதந்திரம் இல்லை என்றே எடுத்துரைப்பேன். சுய ஆட்சி என்று சொன்னால், அந்தந்த மாநிலத்தில் மாநிலமக்கள்மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடைபெற வேண்டும்."

—என்று வினோபாவே கடலூர் கூட்டத்தில் 5-7-56 இல் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

* * *

உண்மை உணரப்படுகிறது

" அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்டதும், நாட்டை நிர்வகிக்கக் கூடிய அனுபவ அறிவு நம்மிடம் போதியபடிஇல்லை. அன்னிய சர்க்காரை எதிர்த்துப் போரிட்ட காலத்தில் அறிவு அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் சுதந்திரம் ஏற்பட்டதற்குப்பிறகு நிலைமை அறவே மாறிவிட்டது. ஆட்சிப்பீடத்தில் தற்போது திறமையானவர்கள் நமக்கில்லாவிடில் நாடு முன்னேற முடியாது. உலகச் சூழ்நிலையைக் கவனிக்குமிடத்து நாட்டின் நிர்வாகம் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினையாகிவிட்டது."

—என்று 24-6-56இல் தியாகராயநகர் சங்கம் ஒன்றில் பேசும்போது தோழர் சி. இராசகோபாலாச்சாரியார் பேசியுள்ளார்.

* * *

காங்கிரசுத் தலைவர்கள் கவனிக்க வேண்டியது

பள்ளிக்கூடங்களில் அரசியல் பேசி பள்ளிகளை அரசியல் பிரச்சார நிலையமாக்கக்கூடாது. பள்ளிகளில் அரசியல் புகுந்தால் அது முதலில் ஆசிரியர்களைப் பற்றிக்கொண்டு பிறகு கட்சிச் சண்டைகளும், பிளவுகளும் ஏற்பட்டு நிலையங்களும் மாணவர்களும் அழிவர்."

—என்று நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் மானாமதுரையில் 28-6-56இல் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

செய்திச்சுருள்

வடவர் நலர் மட்டுமே காக்கும் இந்தியப் பேரரசு

இலங்கையிலிருந்து ஓடிவரும் தென்னாட்டு அகதிகளைப்பற்றி ஏறெடுத்தும் பார்க்காத இந்தியப் பேரரசு மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து வரும் அகதிகளுக்கு இந்த ஆண்டில் ரூ. 50 கோடி நட்டஈடாக அளிக்கத் தீர்மானித்திருக்கிறது. சென்ற ஆண்டில் மட்டும் ரூ. 25 கோடி நட்ட ஈடாக அளித்துள்ளது. மொத்தத்தில் ரூ. 185 கோடி நட்ட ஈடாக அளிக்க அது முடிவு செய்துள்ளதாம். இதுவரையில் வடநாட்டு அகதிகளுக்கான வசதிகள் ஏற்படுத்தித்தரும் வகையில் இந்தியப் பேரரசு ரூ. 300 கோடிக்குமேல் செலவழித்துள்ளது.

°° * *

திராவிடத்தில் அலுமினியம்

அலுமினியத்திற்குத் தேவைப்படும் மூலப்பொருளான 'பாக்சைட்' சேலம் — மேட்டூர் சுற்றுப்புறங்களில் ஏராளமாகக் கிடைக்கிறது. இதுகாறும் அது தோண்டி எடுக்கப்பட்டு வடநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மிகமிகக் குறைந்த செலவில் இச்சுரண்டல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பிறகு உருவாக்கப்பட்ட பொருள்கள் தென்னாட்டிற்குக் கொண்டுவரப்படுகின்றன. கவர்ச்சிகரமான அப்பொருள்களை மிகு விலை கொடுத்து நாமும் வாங்கி நமது வீடுகளில் கையாளுகிறோம். பொதுவாகத் தென்னாட்டவரும், குறிப்பாகக் கழகத்தவரும் நீண்டநாட்களாக வற்புறுத்தி வந்ததன்பேரில், சேலம் மேட்டூரில் 10000 டன் அலுமினியத்தை உற்பத்திச் செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை ரூ. 10 கோடி மூலதனத்தில் நிறுவ இந்தியப் பேரரசுக்கு எண்ணம் எழுந்துள்ளது. எண்ணம் எப்பொழுது செயற்படுமென்று தெரியவில்லை!

* * *

கொள்கைத்துறையில் தவறுகள்

இந்தியக் கம்யூனிசுட்டுக் கட்சி கொள்கைத் துறையில் தவறுகள் பல இழைத்து, மார்க்சீய கட்சியாக இயங்குவதினின்றும், அது ஒழிந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு ஜலந்தரைச் சேர்ந்த சுமார் நூறுபேர்கள் கம்யூனிசுட்டுக் கட்சியைவிட்டு வெளியேறிவிட்டதாகச் செய்தி வந்துள்ளது.

* * *

திராவிடத்தின் மரச்செல்வம்

திருச்சூரை அடுத்த சாலக்குடி என்ற இடத்திலுள்ள காட்டிலாகா அலுவலகத்திற்கு பரம்பிக்குளம் காட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு நூக்கமரம் (ரோஸ்வுட்) ரூ. 34,155க்கு விலை போயிற்று என்று சொல்லப்படுகிறது. அந்த மரம் 13 அடி நீளமும், 188 அங்குலம் சுற்றளவும் கொண்டதாம். கொச்சியிலுள்ள இந்தப் பரம்பிக்குளம் காடுகள் நூக்கமர உற்பத்தியில் உலகப் புகழ் பெற்றவையாகும்.

* * *

வழுக்கைத்தலைக்குக் காரணம்

பெண்களைவிட ஆண்களுக்கு மிகவாக வழுக்கை ஏற்படக் காரணம், அவர்கள் மிகவாகத் தம் மூளையைச் செலவிடுவதால்தான் என்றும், ஆனால் வரவர மிகவான பெண்கள் வேலைபார்க்க முற்படுவதால், சிறிதுகாலத்தில் ஆண்களிடையே காணப்படுவதைப்போலவே பெண்களுக்கும் அதிக வழுக்கை ஏற்படலாம் என்றும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இசைவல்லுநர்கள், நடிகர்கள்போன்ற கலைஞர்களுக்கு அதிக வழுக்கை ஏற்படுவதில்லை என்றும் பிரிட்டிஷ் டாக்டர் ஒருவர் கூறுகிறார்.

* * *

மின்சார மூளை

அமெரிக்காவின் மின்சார இசைமூளை எழுதிய முதல் பாட்டு, அமெரிக்காவில் 15-7-56 இல் தொலைக்காட்சி (டெலிவிஷன்) மூலம் காட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் எந்தக் கவிஞரைக் காட்டிலும் விரைவாக மின்சாரமூளை பாட்டுக்களை எழுத முடியும் என்றும் இப்பொழுதுள்ள இசை வல்லுநர்கள் கூறுகின்றனராம்.

* * *

தென்னாட்டில் பிலிம் தொழிற்சாலை

தென்னாட்டில் சில நகரங்களில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஆரம்பிப்பது இயலக் கூடியதே யாகும் என்று இந்தியாவில் அத்தொழிலை ஆரம்பிப்பதுபற்றி ஆராய்வதற்கு இந்தியப் பேரரசின் அழைப்பிற்கிணங்க வந்திருந்த செர்மன் நிபுணர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனராம்.

மருத்துவ மயக்க மருந்து

(2)

ஹென்றி ஹில் ஹிக்மனையடுத்து மருத்துவ மயக்க மருந்தைப்பற்றி ஆராய்ந்தவர் ராபர்ட் கோலியர் (Robert H. Collier) என்ற ஆங்கிலேய 'மெஸ்மெரிச' மருத்துவராகும். மயக்க மருந்தைக் கண்டுபிடித்து நிலைநாட்டுவதற்குரிய அரிய வாய்ப்பு ஏற்பட்டும் கோலியர் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 1839-ல் அவர் நியூ ஆர்லியன்ஸ் நகருக்குச் சென்றிருந்தபோது, அடிபட்ட நீக்ரோச் சிறுவன் ஒருவனைப் பார்க்க வேண்டி நேரிட்டது. அச் சிறுவன் "ரம்" என்ற மது தயாரிக்கப்படும் தொட்டியருகே வேலைசெய்து கொண்டிருந்த போது அத்தொட்டியிலிருந்து கிளம்பிய புகை அவனைச் சூழ, அதனுல் திக்குமுக்காடிக் கீழே விழுந்ததால் இடுப்பில் அடிபட்டு எலும்பு நிலைமாறிவிட்டது. உணர்வற்ற நிலையிலேயே அவனைக் கோலியரிடம் தூக்கி வந்தார்கள். சிறுவன் உணர்வற்ற நிலையில் இருந்ததால் வேதனைக்கிடமில்லாமல் அவனுடைய இடுப்பு எலும்பின் நிலையைச் சரி செய்தார். இச்சம்பவம் சாதாரணமெனினும், மதுத்தொட்டியிலிருந்து கிளம்பிய புகையின் ஆற்றல்தான் சிறுவனை உணர்வற்ற நிலைக்குத் தள்ளியது என்பதையும், அதன் காரணமாகவே அவன் வேதனையை உணர முடியவில்லை என்பதையும் கோலியர் அறிந்தது தான் முக்கியமானதாகும்.

ஆனுல் கோலியர் மெஸ்மெரிசத்தில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டிருந்தார். மெஸ்மெரிச வித்தைகொண்டு நோயாளிகளை உணர்வற்ற நிலைக்கு மாற்றி, ரண மருத்துவங்களை எளிதாகச் செய்யலாம் என்று முயன்ருர். "ரம் புகை"ச் சம்பவத்திற்குப் பின் அவர் மருந்துகளையும் மெஸ்மெரிசத்தோடு சேர்த்துப் பயன்படுத்த முற்பட்டார். அபினை செடியின் மொட்டு, கொத்தமல்லி இவைகளை சாராயச் சத்துடன் (Alcohol) கலந்து அதிலிருந்து புகையை உண்டாக்கி அதை ஆராய்ந்தார். என்ருலும் மெஸ்மெரிசத்தில் அவருக்கிருந்த நம்பிக்கை குறையவில்லை. மெஸ்மெரிசத்தை விட மருந்துகளில் அதிக நம்பிக்கை வைத்து, ஈதர் வாயுவையும் நினைந்து ஆராய்ந்திருந்தால், அவர் மயக்க மருந்தைக் கண்டுபிடித்திருக்கக் கூடும். ஏனெனில் ஈதர் வாயுவின் தன்மைகளை—உணர்வற்ற நிலை யுண்டாக்கும் தன்மை-1835-ல் ஒரு சொற்பொழிவின்போது தானே முகர்ந்து உணர்ந்தவராகும். ஆனுல் எதுவும் அவரது எண்ணத்தில் தோன்றவில்லை. மெஸ்மெரிச போதகராகவேயிருந்து அரியதொரு வாய்ப்பை இழந்தார்.

அடுத்து மயக்க மருந்து கண்டுபிடிப்பின் வரலாற்றில் இடம் பெறுபவர் கிராபோர்ட் வில்லியம்சன் லாங் (Crawford. Williamson Long) என்ற அமெரிக்க மருத்துவராகும். ஜியார்ஜியாவிலுள்ள ஜெபர்சன் என்ற நகரில் அவர் மருத்துவத் தொழில் புரிந்து வந்தார். பிற்காலத்தில் ரண மருந்திற்கேற்ற மயக்க மருந்தென உறுதி செய்யப்பட்ட ஈதர் எனும் வாயுவை டாக்டர் லாங் 1842-லேயே ரண மருத்துவத்தில் பயன்படுத்தினுர்.

ஈதர் எனும் வாயு 13-ம் நூற்ருண்டிலிருந்தே அறிவியல் வல்லுநர்கள் தெரிந்துகொண்டிருந்த ஒரு பொருளாகும். ஈதர் வாயுவை உட்கொண்டால் அது மன மகிழ்ச்சித் தூண்டுதலுக்குக் காரணமாகி ஒரு விநோத மன நிலையை உண்டாக்குகிறது என்பதை அறிந்து, சிலர் கேளிக்கைகளில் ஈடுபடும்போது பயன்படுத்தி வந்தார்கள்.

டாக்டர் லாங்கிடம் வந்துகொண்டிருந்த நோயாளிகளில் ஜேம்ஸ் எம். வெனபிள் (James M. Venable) என்பவர் ஒருவராகும். அவர் ஈதரை உட்கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தார். அவருடைய கழுத்தில் இரு கரளைகள் (தேவையில்லாத தசை வீக்கம்) இருந்தன. அவை வேதனையைக் கொடுக்காவிட்டாலும் விகாரத் தோற்றத்துடன் விளங்கின. ஆனுல் ரண மருத்துவத்தில் ஏற்படும் வேதனையை நினைந்து அக்கரளைகளை அறுத்துவிட அவர் காலந் தாழ்த்திக் கொண்டே வந்தார்.

அப்பொழுதெல்லாம்-மயக்கமருந்து ரண மருத்துவத்தில் தோன்றுவதற்கு முன்பு—நோயாளிகளை ரண மருத்துவத்திற்குத் தயார் செய்வதே மருத்துவர்களுக்குப் பெரும் வேலையாக இருந்தது. எளிதான காரியம், ஆபத்தில்லாதது. என்று ஏதாவது கூறி நோயாளிகளை ரண மருத்துவத்திற்கு உட்படுத்துவார்கள். அதைப்போன்று, ஒருநாள் டாக்டர் லாங் வெனபிளை அணுகி அவருடைய ரண மருத்துவத்திற்கு முன்பு வேண்டுமென்றால் ஈதரை உட்கொள்ளலாம் என்று கூறினார். இதற்கு வெனபிள் இணங்கினார்.

1842-ம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் 30-ம் நாள் டாக்டர் லாங், தனியாகத் தயார்செய்த ஈதர் வாயுவை வெனபிளுக்குக் கொடுத்தார். வெனபிள் அசைவில்லாமல் படுத்திருந்தார். லாங் கரளைகளில் ஒன்றை அறுத்தார், வெனபிள் எவ்வித வேதனையையும் உணரவில்லை. ரணமருத்துவம் வெற்றிகரமாக முடிந்தது. ஆனால் டாக்டர் லாங்கும் வெனபிளும் தாங்கள் மருத்துவ வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியிருக்கிறோம் என்பதை உணரவில்லை.

ஈதரை ரணமருத்துவத்தில் பயன்படுத்தி அதில் வெற்றிகண்டபின் லாங் என்ன செய்தார்? பின்னால் ஹொரேஸ் வெல்ஸ், நைட்ரஸ் ஆக்சைட் வாயுவை மயக்க மருந்தைக் கண்டுபிடித்தபோது தனது மற்ற வேலைகளை விடுத்து மயக்க மருந்து ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டதைப்போல டாக்டர் லாங்கின் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டதென்றால் இல்லை.

இருவகைப் பண்பினரைப் பற்றி இங்கு குறிப்பிடலாம். ஒரு வகையினர், சீர்திருத்தவும், வெற்றி கொள்ளவும், மனித இனத்திற்கு ஏற்ற ஏதாவதொரு புதுமைகாண ஆர்வமும் ஊக்கமுங்கொண்டோராவர். மற்றொரு வகையினர் தமக்கு ஏற்பட்டிருக்கின்ற வேலைகளிலேயே நாட்டஞ் செலுத்தி அவைகளைக் குறைவின்றிச் செய்து அதன் போக்கிலேயே போய்க்கொண்டிருப்போராகும். டாக்டர் லாங் இதில் பின்வகையைச் சேர்ந்தவராகும். ரண மருத்துவத்தில் ஈதரைப் பயன்படுத்திவிட்டு ஏதொன்றும் நிகழாததுபோல அன்றிரவு அமைதியான தூக்கத்தில் டாக்டர் லாங் ஆழ்ந்துவிட்டார். வெனபிளை ரணமருத்துவத்திற்குத் தயாராக்க, மதுபான வகைகளைக் கொள்வதைப்போன்று ஈதரையும் கொண்டாரே தவிர அச்சம்பவத்திற்கு வேறு முக்கியத்துவம் எதுவும் கொடுக்கவில்லை.

அடுத்துவந்த நான்கரையாண்டுக் காலத்தில் லாங் ஈதரை நான்கு ஐந்து முறை பயன்படுத்தினார். ஆனால் அதைப்பற்றி எவ்விதக் குறிப்பும் எடுக்கவில்லை; அப் புதுமையைத் தெரிவிக்க எந்த மருத்துவக் கழகத்தினரிடமும் செல்லவில்லை; தனது கண்டுபிடிப்பை எந்த மருத்துவமனைக்கும் அறிவிக்கவில்லை; தன்னைக்கொண்டோமிருகங்களைக்கொண்டோ ஆராய்ச்சி செய்வதில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை; எந்த உதவியையும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை. மயக்க மருந்து கண்டுபிடிப்பின் சிறப்பிற்கு டாக்டர் லாங் தான் உரியவர் என்று சிலர் கூறியிருக்கின்றனர். ஆனால் இவர் ஈதர் மயக்கமருந்தை ரணமருத்துவத்தில் முதலில் பயன்படுத்தினார் என்று கூறிக்கொள்ளலாமே தவிர மயக்க மருந்தைக் கண்டுபிடித்தார் என்று கூறுவதற்கில்லை. கண்டுபிடிப்பு என்பது மறைந்து கிடக்கும் ஏதொன்றைக் காண்பதைமட்டும் கொண்டதல்ல. வெளிப்படையான தோற்றத்தில் இருக்கும் ஏதொன்றைக் கண்டு அதன் முயக்கியத்தை அறிதலேயாகும்.

ரணமருத்துவத்தில் ஈதரின் முக்கியத்துவத்தை லாங் அறிந்துகொள்ள அடுத்தடுத்த வாய்ப்புகள் சில ஏற்பட்டன. ஆனால் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் திறனற்றவராக இருந்தார். 1842ல் இரண்டாவது முறையாக ஈதரைப் பயன்படுத்தி வெனபிளின் இரண்டாவது கரளையையும் அறுத்தார். அடுத்து ஒரு நீக்ரோச் சிறுவனின் கால்விரலை யறுக்க ஈதரைக் கொடுத்தார். 1843 ல் ஒரு முறை பயன்படுத்தியிருக்கிறார். மறுபடியும் 1845 ல் பயன்படுத்தினார். ஆனால் 1846 ல், லாங்கைப்பற்றியறியாத, அவரது முறையைத் தெரிந்து கொள்ளாத வேறு ஒருவர் ஈதர் மயக்க மருந்தைக் கண்டுபிடித்துவிட்டார். நான்கரையாண்டுக் காலமாக டாக்டர் லாங்கின் கைகளில் தவழ்ந்துகொண்டிருந்த அரிய வாய்ப்பு விரல்களின் பிடிப்பினின்றும் தவறிவிட்டது.

லாங்கின் ஈதர் சம்பவம் மருத்துவ வரலாற்றில் குறிப்பிடவேண்டிய ஒரு பகுதியாக விளங்கினும், அது மனித இனத்திற்கு மயக்க மருந்தை அளித்தபேறு பெறவில்லை. ஈதரைப்பற்றிய குறிப்பை லாங் வெளியிடுவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பே அது மயக்க மருந்தெனக் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. 1849ல் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு லாங் தனது ஆராய்ச்சியைப்பற்றி மருத்துவப் பத்திரிக்கையொன்றில் வெளியிட்டு, தான் முன்பே அறிக்கை வெளியிடத் தவறியதை விளக்கி வருந்தியிருந்தார்.

"அறிக்கை வெளியிடுவதற்கு முன்பு, தரைப் போதுமான நோயாளிகளிடம் பயன் டுத்தி, உணர்வற்ற மயக்கநிலை அதனால் ண்டாக்கப்படுகிறது, வெறும் கற்பனையோ துல்லது வேதனையை மறக்கடிக்கக்கூடிய சித்திரமான வேறு எதுவோ காரணமல்ல—ன்று நான் என் எண்ணத்தை உறுதிசெய்து கொள்ளவே ஆவலாக இருந்தேன்" என்று துதில் லாங் குறிப்பிட்டிருந்தார். மற்றொரு வரால் ஈதர் மயக்கமருந்திற்குரியதென அறி விக்கப்படும்வரை லாங் அதை மயக்க மருந் தென உறுதியாகக் கொள்ளவில்லை என்பது தெரியவருகிறது.

1852-ல் ஜியார்ஜியா மருத்துவக் கழகத்தின் முன் தனது ஆராய்ச்சிபற்றிக் கூறும்போது, என்னுடைய அறிக்கையை முன்கூட்டியே தெரிவிக்கவில்லை என்பதால் கண்டுபிடிப்பின் றப்பு உரியதல்ல என்று இக்கழகம் கருதுமே னால் உற்சாகத்துடன் அதற்கு ஒருப்படு கிறேன்" என்று லாங் குறிப்பிட்டுத் தனது யர்ந்த பண்பை நிலைநாட்டினார்.

மயக்க மருந்தின் சிகரத்தை நோக்கி விரைந் தவர்களில் லாங் மிக அருகே வந்தார். ஆனால் சிகரத்தைப்பிடிக்க முடியவில்லை.

ரணமருத்துவ மயக்க மருந்துக் கண்டுபிடிப் பில் ஹிக்மன்—லாங் இருவருடைய முயற்சி கள் ஒற்றுநோக்கின் விந்தையாகத்தோன்றும். ஹிக்மன் முறையை அறிந்திருந்தார்; ஆனால் முடிவைப்பெறவில்லை. லாங் முடிவைப் பெற் றார்; ஆனால் முறையின் சிறப்பை உணர்ந்து கொள்ளவில்லை. ஹிக்மன் அறிக்கை வெளி யிட்டு பிறர் கவனத்தையும் உதவியையும் வேண்டினார். லாங் பிறர் கவனத்தைத் திருப்பவும் எண்ணவில்லை. உதவிகோரியும் செல்லவில்லை.

அட்டைப்படம்

மருத்துவ மயக்க மருந்தின் ஆரம்ப ஆராய்ச்சி யாளர் "ஹென்றி ஹில் ஹிக்மன்"

மருத்துவ வரலாற்றில் . . . ஒரு நிகழ்ச்சி

மனித உடலின் உள் அமைப்பைக் கண்டு தமது அறிவைப் பெருக்கி, மருத் துவத் துறையில் வளர்ச்சியைக் காண எண்ணிய மருத்துவர்கள், சென்ற இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு இறந்தவர்களின் உடல்களை அறுத்துப்பார்க்க முற் பட்டனர். ஆனால் மதவாதிகளும், அவர்கள் காட்டிய அருள்வழியில் மயங்கி வீழ்ந்துகிடந்த மக்களும் மருத்துவர்களின் செயலைக் கண்டித்தனர். எதிர்த்துக் கிளம்பினர். பிணத்தை அறுக்க முனைந்தவர்கள் பிணமாக்கியும் கூறுபோடுவார் கள் என்றுகூட எண்ணினர்.

1788ல், ஒருநாள் நியூயார்க் நகரில் மருத்துவர்களுக்கெதிராக ஒரு கலகம் தோன்றியது. அன்று ரிச்சர்ட் பேயில் (Richard Bayle) என்ற மருத்துவர், மருத் துவமனை ஆய்வுச்சாலையில் வேலை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஜன்னல் வழியே ஒரு சிறுவன் எட்டிப்பார்க்கவே அவனை விரட்டும் பாவனையில் தன் அருகே கிடந்த ஒரு கைஎலும்பை எடுத்து பேயில் அதட்டி போகும்படிச் சொன் னார். சிறுவன் மிரண்டோடி தன்னை டாக்டர் கொல்லவந்ததாகச் சிலரிடம் கூறி னான். சிலர் பலராகி உடல் ஆராய்ச்சிக்குத்தான் சிறுவனைக் கொல்ல முற்பட்டார் என்ற முடிவிற்கு வந்தனர். அவ்வளவுதான் மருத்துவமனை நோக்கி அக்கூட்டம் படையெடுத்தது. உடல் ஆராய்ச்சிக்கான அந்த ஆய்வுச்சாலை சிறிது நேரத்தில் தரைமட்டமாக்கப்பட்டது. தப்பித்து வெளியேறிய மருத்துவர்கள் சிறைச்சாலை யில் சரண்புகுந்தனர். அங்கும் கூட்டம் படையெடுத்தது. ஆனால் ராணுவத்தினர் இடையில் வந்து கலகத்தை அடக்கினர். இதில் ஏழு கலகக்காரர்கள் உயிரிழந் தனர்; பலர் காயமுற்றனர்.

அதற்கு அடுத்த ஆண்டு நியூயார்க் சட்டசபை மரண தண்டனைக்குட்பட்ட குற்றவாளிகளின் உடல்களையே மருத்துவர்கள் உடல் ஆராய்ச்சிக்குப் பயன்படுத் தலாமெனச் சட்டம் கொண்டுவந்தது.



(47)

அகத்தியர்

பிரமதேவர், தமது பிரமலோகத்தைவிட்டு அடிக்கடி வேறு உலகங்களுக்குச் செல்வார், வேடிக்கைகள் காண. சிருட்டி கர்த்தா என்றாலும், சிருட்டி வேலை அதிகமாக இருக்கும் பொழுது, அடிக்கடி "சிந்தை குளிரும் வகையில்" ஏதாவது விளையாட்டுகளில் ஈடுபடாமல் அவரால் இருக்க முடிவதில்லை. ஒருசமயம் அவர் தேவலோகம் வந்து, சோமபானம் அருந்தி, இந்திர சபைக்கு வந்தார். பிரமனின் வரவு கண்டு இந்திரன் உபசரித்ததல்லாமல், ஆடல் பாடல்களுக்கும் ஏற்பாடு செய்தான். அரம்பையர்கள் ஆடினார்கள், பாடினார்கள், பிரமதேவரின் நெஞ்சமும் ஆடியது, குழறிய நாக்குப் பாடியது. திலோத்தமை, மேனகை, ஒருவரையொருவர் மிஞ்சும்விதத்தில் ஆடல் இருந்தது. பெண்களின் ஆடல் பாடல்களைப் பிரமதேவன் இரசித்தபடி இருந்தார். கலையழகு கண்டல்ல, அங்க அழகு கண்டு. அவர் மனதில் மூண்ட காமக்கிளர்ச்சி வளர்ந்தபடி இருந்தது. கடைசியாக, ஊர்வசி ஆட வந்தாள். திருமாலின் உடலிலிருந்து பிறந்த ஊர்வசி, பிரமாவிற்குத் தங்கை முறைவேண்டும். இருந்தாலும் அவள் ஆடலைக்கண்டதும், பிரமாவிற்கும் மோகதாகம் அதிகமானது. அவளைக்கண்ட நினைவில், மனதில் ஏற்பட்ட மயக்கத்துடன். கலசமொன்றை எடுத்து அணைத்துக் கொண்டார். குடத்திலிருந்து அகத்தியர் பிறந்தார்.

அகத்தியருக்குத் தந்தை பிரமா. தாய் ஒரு குடம். ஆதலால் அகத்தியர் குடமுனி என்று அழைக்கப்பட்டார்.

மற்றொரு புராணக் கதையில், ஊர்வசியிடம் மோகங்கொண்ட மித்திரன், வருணன் இருவருடைய தேஜசும் ஒரு குடத்தில் தங்க, நிமி என்பவனால் தேகமில்லாமல் வருந்த, பிரமதேவன் கட்டளைப்படி குடத்தினில் புகுந்து, அகத்தியர் வடிவில் வெளி வந்தாராம். இந்தக் கதையின்படி வசிட்டர் மாற்றுருக் கொண்டு வந்ததே அகத்தியர் உருவமாகும்.

மச்ச புராணத்தில் அகத்தியர் குடத்தில் பிறந்த கதை வேறு விதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அசுரர்கள் பலமிக்கவர்களாய், பூலோகத்தில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்தினார்கள். முனிபுங்கவர்கள் தமது குருகுலத்தையும், குரு பத்தினிகளையும் காணாமற் போக்கிவிட்டு, இந்திரனிடம் வந்து முறையிட்டுக்கொண்டார்கள். இந்திரன் தனக்கு உதவியாக, வருணன் வாயு இருவரையும் அழைத்துக்கொண்டு பூலோகத்துக்கு வந்தான். இந்திரனுடன் போரிட முடியாமல், அசுரர்கள் ஓடிப்போய், கடலுக்கடியில் ஒளிந்துகொண்டார்கள். அவர்களைத் தேடிக் கொண்டுவரும்முயற்சியில், அக்னியைவைத்துவிட்டு இந்திரன் தன்னுலகம் வந்தான். அசுரர்கள் கடலுக்கடியில் ஒளிந்திருக்கிறார்களென்றதும், அக்னி அவர்களைக் கண்டுபிடித்து வெளிக்கொண்டுவராமல் வாளாவிருந்தனன். காவல் தளர்ந்திருப்பது கண்ட அசுரர்கள் மீண்டும் வெளிவந்து பூலோகத்து இருடிகளுக்கும், தேவர்களுக்கும் இன்னல்களைத் தந்து, பின் ஓடி கடலுக்கடியில் முன்போல ஒளிந்துகொண்டார்கள். இந்திரன் மீண்டும் பூலோகத்துக்கு வந்து, கடலுக்கடியில் அசுரர்கள் மறைந்து விடுவதால், கடல் நீரையெல்லாம் வரளச் செய்து விடுமாறு அக்கினிக்குக் கட்டளையிட்டான். "கடல்நீரையெல்லாம் வரளச் செய்துவிட்டால், பூமியில் உள்ள உயிர்களெல்லாம் அழிந்துவிடும்" என்று அக்கினி அந்த வேலையைச் செய்யாதிருந்தான். தனது கட்டளை நிறைவேற்றப்படாதது கண்ட இந்திரன், வாயுவிற்கு அதே



(47)

அகத்தியர்

பிரமதேவர், தமது பிரமலோகத்தைவிட்டு அடிக்கடி வேறு உலகங்களுக்குச் செல்வார், வேடிக்கைகள் காண. சிருட்டி கர்த்தா என்றாலும், சிருட்டி வேலை அதிகமாக இருக்கும் பொழுது, அடிக்கடி "சிந்தை குளிரும் வகையில்" ஏதாவது விளையாட்டுகளில் ஈடுபடாமல் அவரால் இருக்க முடிவதில்லை. ஒருசமயம் அவர் தேவலோகம் வந்து, சோமபானம் அருந்தி, இந்திர சபைக்கு வந்தார். பிரமனின் வரவு கண்டு இந்திரன் உபசரித்ததல்லாமல், ஆடல் பாடல்களுக்கும் ஏற்பாடு செய்தான். அரம்பையர்கள் ஆடினார்கள், பாடினார்கள், பிரமதேவரின் நெஞ்சமும் ஆடியது, குழறிய நாக்குப் பாடியது. திலோத்தமை, மேனகை, ஒருவரையொருவர் மிஞ்சும்விதத்தில் ஆடல் இருந்தது. பெண்களின் ஆடல் பாடல்களைப் பிரமதேவன் இரசித்தபடி இருந்தார். கலையழகு கண்டல்ல, அங்க அழகு கண்டு. அவர் மனதில் மூண்ட காமக்கிளர்ச்சி வளர்ந்தபடி இருந்தது. கடைசியாக, ஊர்வசி ஆட வந்தாள். திருமாலின் உடலிலிருந்து பிறந்த ஊர்வசி, பிரமாவிற்குத் தங்கை முறைவேண்டும். இருந்தாலும் அவள் ஆடலைக்கண்டதும், பிரமாவிற்கும் மோகதாகம் அதிகமானது. அவளைக்கண்ட நினைவில், மனதில் ஏற்பட்ட மயக்கத்துடன். கலசமொன்றை எடுத்து அணைத்துக் கொண்டார். குடத்திலிருந்து அகத்தியர் பிறந்தார்.

அகத்தியருக்குத் தந்தை பிரமா. தாய் ஒரு குடம். ஆதலால் அகத்தியர் குடமுனி என்று அழைக்கப்பட்டார்.

மற்றொரு புராணக் கதையில், ஊர்வசியிடம் மோகங்கொண்ட மித்திரன், வருணன் இருவருடைய தேஜசும் ஒரு குடத்தில் தங்க, நிமி என்பவனால் தேகமில்லாமல் வருந்த, பிரமதேவன் கட்டளைப்படி குடத்தினில் புகுந்து, அகத்தியர் வடிவில் வெளி வந்தாராம். இந்தக் கதையின்படி வசிட்டர் மாற்றுருக் கொண்டு வந்ததே அகத்தியர் உருவமாகும்.

மச்ச புராணத்தில் அகத்தியர் குடத்தில் பிறந்த கதை வேறு விதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அசுரர்கள் பலமிக்கவர்களாய், பூலோகத்தில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்தினார்கள். முனிபுங்கவர்கள் தமது குருகுலத்தையும், குரு பத்தினிகளையும் காணாமற் போக்கிவிட்டு, இந்திரனிடம் வந்து முறையிட்டுக்கொண்டார்கள். இந்திரன் தனக்கு உதவியாக, வருணன் வாயு இருவரையும் அழைத்துக்கொண்டு பூலோகத்துக்கு வந்தான். இந்திரனுடன் போரிட முடியாமல், அசுரர்கள் ஓடிப்போய், கடலுக்கடியில் ஒளிந்துகொண்டார்கள். அவர்களைத் தேடிக் கொண்டுவரும்முயற்சியில், அக்னியைவைத்துவிட்டு இந்திரன் தன்னுலகம் வந்தான். அசுரர்கள் கடலுக்கடியில் ஒளிந்திருக்கிறார்களென்றதும், அக்னி அவர்களைக் கண்டுபிடித்து வெளிக்கொண்டுவராமல் வாளாவிருந்தனன். காவல் தளர்ந்திருப்பது கண்ட அசுரர்கள் மீண்டும் வெளிவந்து பூலோகத்து இருடிகளுக்கும், தேவர்களுக்கும் இன்னல்களைத் தந்து, பின் ஓடி கடலுக்கடியில் முன்போல ஒளிந்துகொண்டார்கள். இந்திரன் மீண்டும் பூலோகத்துக்கு வந்து, கடலுக்கடியில் அசுரர்கள் மறைந்து விடுவதால், கடல் நீரையெல்லாம் வரளச் செய்து விடுமாறு அக்கினிக்குக் கட்டளையிட்டான். "கடல்நீரையெல்லாம் வரளச் செய்துவிட்டால், பூமியில் உள்ள உயிர்களெல்லாம் அழிந்துவிடும்" என்று அக்கினி அந்த வேலையைச் செய்யாதிருந்தான். தனது கட்டளை நிறைவேற்றப் படாதது கண்ட இந்திரன், வாயுவிற்கு அதே

வித உத்திரவைத் தந்தான். அவனும் ஒருப் படவில்லை. இந்திரனுக்குக் கோபம் வந்து, "நீங்கள் இருவரும் ஒரு குடத்துக்குள் பிறந்து, கடல்நீரையெல்லாம் குடிப்பீர்களாக!, என்று சாபந்தந்தான். அக்னி, வாயு இருவரும் ஒரு குடத்துக்குள்ளிருந்து, அகத்தியராக உருவெடுத்து வந்தார்கள்.

அகத்தியர் மிகக் குறுகிய உருவமுடையவராய் நான்கு கைகளுடன் இருந்தார்.

அசுரர் கூட்டத்தில் விருத்திராசுரன் என்பவன் மிகப்பலசாலியாகி, இந்திரன் மீது படையெடுத்து, அவனைத்தோற்கடித்தான். இந்திரன் ஓடி ஒளிந்தான். விருத்திராசுரன் தேவலோகத்துக்கு அரசனுகி, மீண்டும் பிரமனிடம் போய் வரங்கள் பல பெற்று, இந்திரனைத் தேடிப்பிடித்து, அவனைச் சிறு உருண்டையாக்கி, விழுங்கிவிட்டான். இந்திரனைக்காணுது, தேவர்கள் துன்பமடைந்து, தமது அம்புகளை விட்டனர். அதனுல் விருத்திராசுரன் கொட்டாவிவிட, அப்பொழுது இந்திரன் வெளிவந்து, ஓடிப்போய் மூவர்களின் அருள்பெற்று, விருத்திராசுரனை விரட்டினுன். விருத்திராசுரன் கடலுக்கடியில் ஒளிந்து பிரமாவைநோக்கித் தவஞ்செய்தான். அசுரனுடன் போர்துவக்குமுன், அவன் செய்யும் தவத்தைக் கெடுக்கவேண்டுமென்று இந்திரன் திட்டமிட்டு, வழக்கம்போல் தேவமாதர்களை அனுப்பினுன். தவம் செய்யும் அசுரன்முன் ஊர்வசி சென்று அவனைத் தன் மீது மோகங்கொள்ளுமாறு செய்து, கள்ளைக் கொடுத்து, அவன் தவத்தைக் கலைத்தாள். இந்தச்சமயம் கடல்நீரை வளரச்செய்வதற்கு இந்திரன் அகத்திய முனிவரை வேண்டிக் கொண்டான். அகத்திய முனிவர், கடல்நீரையெல்லாம் ஒன்றுதிரட்டி, தம் உள்ளங்கையில் அடக்கி, சாப்பிட்டுவிட்டார்! இந்திரன் அசுரர்களை அழித்ததும், அகத்தியர் தன் வயிற்றில் அடக்கிவைத்திருந்த கடலை, வெளிவிட்டார்.

அவரது ஆற்றலைக்கண்டு வியந்த மும்மூர்த்திகள் அவர்முன் தோன்றி என்ன வேண்டுமென்று கேட்க, அதற்கு "25,000 கோடி பிரமாக்கள் வந்து போகுமளவும் நான் தெற்குத்திசையில் இருக்கவேண்டும்" என்று வரங்கேட்டுப் பெற்றுர்.

பிரமபுத்திரர்களில் ஒருவரான புலத்தியருடைய மகன் அகத்தியர் என்றும் சில புராணங்களில் கூறப்படுகிறது. புலத்தியருடைய அண்ணன் மகன் ஆவிர்பு என்பவன், புலத்தியருக்கும் ஆவிர்புவிற்கும் பிறந்தவராம் அகத்தியர்.

அகத்தியர் பன்னிரண்டு ஆண்டுகள் தண்ணீரின் மேல் உட்கார்ந்து தவஞ்செய்தாராம். அவரது தவம் வலிமைபெற்று, முனிவரென்ற பட்டத்துடன், சிவபெருமானின் கல்யாணத்தைக் காண கைலையங்கிரி சென்றுராம். தேவர்கள், முனிவர்கள், உலகமக்கள் எல்லோரும் கைலையங்கிரியில் கூடிவிட்டதால் வடக்குப் பக்கம் தாழ்ந்து தெற்குப்பக்கம் உயர்ந்துவிட்டதாம். இதைச் சமன் செய்ய, சிவன் அகத்தியரைத் தெற்கு நோக்கி அனுப்பினுர். அகத்தியர் கங்கையில் ஒரு கமண்டலம் நீர் எடுத்துக்கொண்டு, நடக்க ஆரம்பித்தார். வரும் வழியில் விந்தமலை, உயர்ந்து நின்று வழியைத் தடுத்ததாம். மேருமலைக்குப்போட்டியாக இருந்த அந்தமலை, அகத்தியரைக் கண்டதும் பணிவுடன் தலையைத் தாழ்த்தியதாம், கட்டைவிரல் உயரமுள்ள அகத்தியர் மலையைத் தாண்டி தெற்கே வந்தார். அப்பொழுது ஒரு காட்டில் முனிவர்கள் பலர் தலை கிழாக மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தார்கள். அகத்தியர் அவர்களைப் பார்த்து "ஏன் இவ்விதம் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"எங்கள் சந்ததியில் அகத்தியன் என்று ஒருவன் இருக்கிறுன். அவன் இல்லறமடையாது இன்னும் இருக்கிறுன். அதனுல், அவனுடைய மூதாதையர்களாகிய நாங்கள் இவ்வாறு அவதிப் படவேண்டியிருக்கிறது" என்று அவர்கள்—வௌவால்போல் தொத்திக்கொண்டிருக்கும் முனிவர்கள் சொன்னுர்கள்.

"ஐயோ! நான்தான் அந்த அகத்தியன் என்பவன். விரைவில் இல்லறமேற்று உங்கள் துன்பத்தைப் போக்குவேன்." என்று அகத்தியர் விதர்ப்பநாட்டுக்குப் போனுர். அந்த நாட்டு அரசன் நடத்திய யாகமொன்றின் பலனுக, அவனுக்கு உலோபமுத்திரை என்ற மகள் இருந்தாள். அந்தப் பெண்ணை, கட்டைவிரல் முனிவர் கேட்டார், காவலனும் அட்டியின்றிப் பெண்ணைக் கட்டிக் கொடுத்தான். குருபத்தினி பின்வர, முனிவர் தெற்குநோக்கிவந்து பொதிகை மலையில் குடியேறினுராம்.

கந்தபுராணத்தில் வரும் கதைப்படி பார்த்தால், அகத்தியர் தெற்குநோக்கி வரும்பொழுது, காவிரியாற்றைத் தமது கமண்டலத்துக்குள் வைத்துக்கொண்டு வந்தாராம்.

தெற்குநோக்கி அகத்தியரைப் போகும்படி சிவன் சொன்னபொழுது, "தெற்கில் உங்களை வழிபட தீர்த்தம் வேண்டும்" என்று அகத்தியர் கேட்டாராம். சிவபெருமான் அதற்கு ஒப்புதல் அளித்து, திருக்கயிலாய மலையில் விளையாடிக்கொண்டிருந்த ஏழு நதிகளைக் கூப்பிட்டு, அவைகளில் ஒன்றான காவிரியை வருமாறு அழைத்தார்—சப்த நதிகளும் பெண்களாக இருந்தார்கள். காவிரி முன்வந்ததும் "நீ முனிவரோடு தெற்குத்திசைக்குப் போ!" என்று சிவபெருமான் ஆணை தந்தார்.

முனிவர் கட்டைவிரலளவு இருந்தாலும், பெண்ணொருத்தியைப் பார்த்ததும், கண்ணைச் சுழற்றி கருத்தை விளக்கிப் பரவசமானாரோ என்னவோ, அகத்தியருடன் போக காவிரி தயங்கினாள்.

சிவபெருமான் "ஏன் தயங்குகிறாய்?" என்று கேட்டார்.

"எம்பெருமானே! நான் ஒரு பெண். இந்த ஆணுடன் தனித்துப் போவது முறையாகுமா?" என்று காவிரி மாது கேட்டாள். முனிவரென்றால் பெண்களுக்கு அவ்வளவு "பய பக்தி" இருந்தது!

சிவபெருமான் சிரித்து "இவன் மாறுபாடில்லாத மனத்தினன். நம்முடைய அடியவர்களிற் சிறந்தவன். நீ இவன் பின்னே போவாய்!" என்று அருளினார்.

காவிரி அகத்தியர் பின் செல்ல இணங்கினாள். அகத்தியர் அவளைத் தன் கமண்டலத்துக்குள் அடைத்துக்கொண்டு தெற்கில் வந்தார். அப்பொழுது இந்திரன் அசுரர்களுக்கு அஞ்சி, சீர்காழியில் ஒரு நந்தவனத்திலிருந்த மூங்கிலுக்குள் ஒளிந்துகொண்டிருந்தானும், மழையில்லாத காரணத்தால், அந்த நந்தவனம் வாட ஆரம்பித்ததாம். அகத்தியர் கமண்டலத்தில் காவிரியிருப்பதை நாரதர் மூலமாக அறிந்த இந்திரன், விநாயகரை நோக்கித் தவஞ்செய்தான். விநாயகர் தோன்றியதும், தன் குறையை அவன் தெரிவித்தான்.

"அகத்தியர் கமண்டலத்திலிருக்கும் காவிரியாற்றை இங்கு வரச் செய்கிறேன்" என்று வேழமுகக் கடவுளும் வரந்தந்து மறைந்தார்.

அதன்பின் விநாயகர் காக வடிவத்துடன் அகத்தியரிருக்குமிடம்போய், அவர் பக்கத்திலிருந்த கமண்டலத்தின்மீது, உட்கார்ந்தார். காக்கை உட்கார்ந்து விட்டதென்று அகத்தியர் அதை விரட்ட வந்தார். அதற்குள் கமண்டலத்தைக் காக்கை உருட்டிவிட்டது, தண்ணீர் வழிந்து, ஆறுகப் பெருகி ஓடியது.

விநாயகன் காக்கை உருவத்தை மாற்றி, பிராமணச் சிறுவன் போல ஓடினார். அகத்தியர் அவனைத் துரத்திக்கொண்டு வந்தார். சிறுபயல் இந்த அடாத காரியம் செய்தானே யென்று நினைத்து, அவனைப் பிடித்துத் தலையில் குட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன், கையை மடக்கி சிறுவனருகில் வந்தார்.

அப்பொழுது பிராமணச் சிறுவன் தன் உருவத்தை மாற்றி, விநாயக உருவத்துடன் நின்றான். "பெருச்சாளி நாயகன் நேரில் வந்திருக்கிறான். அவன் தலையில் குட்ட நினைத்தேனே! பெரும்பழி, பெரும்பழி!" என்று மடக்கிய கைகளால் தன் தலையில் அகத்தியர் குட்டிக் கொண்டாராம்.

"உனக்கு என்னவரம் வேண்டும்" என்று விநாயகப் பெருமான் கேட்க, "நான் தங்கள் முன் தலையில் குட்டிக்கொண்டதுபோல; தங்களுடைய சந்நிதானத்தில் குட்டிக்கொள்பவரின் குறைகளைத் தீர்த்து அருள்புரிய வேண்டும்" என்று வினயத்துடன் அகத்தியர் கேட்டுக்கொண்டார்.

"அப்படியேயாகுக!" என்று விநாயகர் அருளினார். பிள்ளையார் சிலைக்குமுன் குட்டிக்கொள்வதற்கான பல கதைகளில் இதுவும் ஒன்று. அத்துடன், காவிரி நதி தெற்கில் இருந்தாலும், அது வடக்கிலிருந்து வந்தது என்று கூறிக்கொள்ளுகிறது வடநாட்டுப் புராணக்கதை. தென்னாட்டு மொழியான தமிழ் கூட அவர்கள் புராணப்படி வடநாட்டிலிருந்து அகத்தியரால் கொண்டு வரப்பட்டதாகும். ஏதாவது சிறந்ததாக, போற்றத் தகுந்ததாக இருந்தால், அது தங்களிடமிருந்து வந்தவையென்று, ஆரிய வர்த்தத்தில் இருந்தவர்கள் பொய்யும் புனைவும் மிகுந்த புராணங்களில் எழுதிக்கொண்டார்கள்.

அகத்தியர் ஒருசமயம் இந்திரசபைக்குப் போயிருந்தார், அங்கு நடைபெறும் நடனங்களைக் காண! முற்றுந்துறந்த குட்டை முனிக்கு ஆடல் பாடல் காண ஆவல் ஏன் என்று கேட்கலாம்? புராணங்களில்வரும் கடவுள்களே ஆசாபாசங்களைத் தவிர்க்க முடியாமல் அவதிப்பட்டார்கள் என்றால், இந்தக் குறுமுனியால் எவ்வாறு தனியாக இருக்க முடியும். அகத்தியர் இந்திர சபைக்கு வந்ததும், இந்திரன் அவரை உபசரித்து, ஊர்வசியைக் கூப்பிட்டு நடனமாடச் சொன்னான்.

முன்னமொரு முறை ஊர்வசியின் ஆடலைக் கண்டு பிரமன் காமவசப்பட்டு, அகத்தியரைப் பெற்றார். இப்பொழுது அவர் பிள்ளை அதே ஊர்வசியின் ஆடலைக் காண வந்தார். ஊர்வசியின் நடனம் அன்று சபையிலிருந்தவர்களுக்குக் களிப்பைத் தரவில்லை. இந்திரன் மகனை சயந்தனை அடிக்கடி பார்த்தவண்ணம் ஊர்வசி ஆடினாள். சயந்தனிடம் ஊர்வசி மனம் வைத்துள்ளாள் என்று தெரிந்ததும், அகத்தியர் மிகவும் கோபமடைந்து, இருவரையும் மனிதராகப் பிறக்கும்படிச் சாபமிட்டார்! அவர்களுக்குள் காதலென்றால் இந்த அருந்தவ முனிவருக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

அகத்தியர் காமத்துக்கு அடிமைப்படாமலிருந்தாரா என்றால் சொல்ல முடியாது. காமன்விட்ட அம்புகளுக்குப் பலியாகி, தனது சிறு உடல் பதற, மோகமாயிருக்கிறார். கந்தபுராணத்தில், சிவனின் மோன நிலையைக் கலைக்கும்படி, காமனுக்குப் பிரமா உத்திரவு தருகிறார். சிவன்மீது அம்பு வீசிடக் காமன் அஞ்சுகிறான். அப்பொழுது தன்னுடைய மலரம்புக்கு மாலும் அயனும் மற்றுமுள்ள தேவர்களும் முனிவர்களும் பலியாகியிருக்கிறார்கள், ஆனாலும் சிவனிடம் செல்லப் பயமாயிருக்கிறது என்று காமன் சொல்கிறான். மதனன் அம்புபட்டு மயங்கியவர்கள் பெயர்களில் அகத்தியர் பெயரும் காணப்படுகிறது.

மறைதே ரும்வசிட் டன்மரீ சிமிகக்
குறிதா முனியத் திரிகோ தமனல்
லறிவா லுயர்கா சிபனு தியாரந்
துறவோர் தமதாற் றலேலைத் திலனே.

(கந்தபுராணம்—உற்பத்தி காண்டம்
காமதகனப்படலம்)

"வேதங்களை யுணர்ந்த வசிட்டரும், மரீசியும், மிகக் குறுகியவரான அகத்தியரும், அத்திரியும், கௌதமரும், சிறந்த ஞானத்தாலுயர்ந்த காசிபனும் ஆகிய துறவிகளின் தவவல்லமையைத் தொலைக்கவில்லையோ?"

காமத்துக்குப் பலியான இந்திரன் சந்திரன் போன்றவர்களுடன் சமமாகக்கூறும் அளவுக்கு அகத்தியரும் மற்ற முனிவர்களும் "உயர்ந்திருந்தார்கள்." கந்தபுராணத்தில் இந்த ஒரு குறிப்புமட்டும் தரப்பட்டிருக்கிறது.

காவிரி நதியைத் தமிழ்நாட்டுக்குக்கொண்டு வந்ததுபோல், பொருநை நதியும் அகத்தியரால் கொண்டுவரப்பட்டதாகப் புராணங் கூறுகிறது. காவிரிப்புராணத்தில், காவிரி நதி அகத்தியருக்கு மனைவியானாள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பாரதத்தில், விதர்ப்ப நாட்டு அரசன்மகள் உலோபமுத்திரை, அகத்தியருக்கு மனைவி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"அகத்தியம்" என்ற இலக்கண நூல் தொல்காப்பியக் காலத்துக்கு முற்பட்டு இருந்ததாகத் தெரிகிறது.

மேற்கோளாகக் காட்டப்படும் ஒரிரு இடங்கள் தவிர, முழுநூலாக அது இப்பொழுது கிடைக்கவில்லை. இலக்கண நூல் தவிர, மிகப் பிற்காலத்ததாகக் கருதப்படும் சில மருத்துவ நூல்களும் அகத்திய சித்தர் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றன. அகத்தியர் என்ற பெயருடைய பலர் தமிழ்நாட்டில் பல்வேறு காலங்களில் இருந்திருக்கின்றனர். ஆனால் அந்தப்புலவர்களும், சித்தர்களும், வடமொழிப்புராணங்களில் வருணிக்கப்படும் குள்ளரான அகத்திய முனிவருக்குச் சிறிதும் தொடர்புடையவர்கள் அல்லர். புராணங்கள் பெரிதும் புனைந்துரைக்கப்பட்டவை, பொய்யும் புளுகும் நிறைந்தவை. அவற்றில் காணப்படும் சில பெயர்கள் உண்மையில் வாழ்ந்தோர் சிலரைக் குறிப்பதாக இருக்கும் காரணத்தால், இருபாலர் உரையும் ஒன்றெனக் கருதி மயங்குதல் கூடாது.

புதிய வெளியீடுகள்

ஆசிரியர்: இரா. செழியன், எம்.ஏ.

போராட்டம் —(ஓரங்க நாடகங்கள்)

அண்டசராசரம் —(முதற்பகுதி)

(மற்றும் பல நூல்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன)

விவரங்கட்கு;

மன்றம் அலுவலகம்: 26, நைனியப்பன் தெரு, சென்னை-1

மன்றல் பெற வந்த மணமகன்

[இரா. நெடுஞ்செழியன்]

ஆற்றலெல்லாம் கூடிய நம்பி ஒருவனும், அழகெல்லாம் கூடிய நங்கை ஒருத்தியும் ஆருயிர்க் காதலராக இருந்து, களவொழுக்கத்திலே மிகவும் திளைத்து இருக்கின்றனர். மற்றோர் உறவினர்க்குத் தெரியாமல் இருவரும் பகற்குறி இரவுக்குறி இடங்களை ஏற்படுத்திக்கொண்டு களவொழுக்கத்தை இன்பகரமாகக் கழித்து வருகின்றனர். அவர்களின் களவொழுக்கத்திற்கு யாதொரு இடையூறும் ஏற்படாவண்ணம் காப்பாற்றி வருவதிலே தோழி பேருதவி புரிந்து வருகிறாள். இப்படியாகச் சிலகாலம் கழிகின்றது.

ஒருநாள் தலைவனும் தலைவியும் குறியிடத்துத் தனித்திருந்து உரையாடிக்கொண்டிருக்கும்போது, "களவொழுக்கத்தை உற்றாரும் உறவினரும் தெரிந்துகொண்டு இழிச்சொல்லும் பழிச்சொல்லும் வீசி, நம்மைக் கொடுமைகளுக்கு ஆளாக்குவதற்கு முன்பு, முறைப்படி நம் தாய் தந்தையர்க்கு அறிவித்துத், திருமணம் செய்துகொண்டு, வெளிப்படையாக இல்லற வாழ்வை இனிதாக நடத்துவது நமக்கு நலம் பயக்குமே!" என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

தலைவன் சற்று தயக்கத்துடன் "திருமணத்திற்கு இப்பொழுது என்ன அவ்வளவு விரைவு?" என்று கேட்கிறான்.

"நான் இரவுக்குறி பகற்குறியிடங்களுக்கு வந்து சேர எவ்வளவு இடர்ப்பாடு படவேண்டியிருக்கிறது தெரியுமா? என் தாய் தந்தையர்க்குத் தெரியாமல், அச்சப்பட்டு அச்சப்பட்டு இக் களவொழுக்கத்தை இன்னும் எத்தனை நாட்களுக்கு மூடி மறைத்துக்கொண்டிருக்க முடியும்?" என்று தலைவி வினவுகிறாள்.

"இப்பொழுதுள்ள சூழ்நிலையில் திருமணம் வேண்டாம் என்று கருதுகிறேன்!"

"என்ன?... திருமணம் வேண்டாமா? அப்படியானால் நாம் திருமணம் செய்துகொள்ளப் போவதே யில்லையா?"

"நாம் திருமணம் செய்துகொள்ளத்தான் போகிறோம்: ஆனால் இப்பொழுது வேண்டாம் என்கிறேன்!"

"ஏன் இப்பொழுது வேண்டாம்?"

"இப்பொழுது எனக்கு விருப்பமில்லை!"

"என்னைத் திருமணம் செய்துகொள்ளவே உங்களுக்கு விருப்பமில்லையா?"

"உன்னைச் செய்துகொள்ள விருப்பமில்லை என்று நான் எப்படிக் கூறுவேன்? நான் உயிர் வாழ்வதே, நீ இருக்கிறாய் என்பதற்காகத் தானே! இப்பொழுதுள்ள சூழ்நிலையில் திருமணம் செய்துகொள்ள விருப்பமில்லை என்று தான் கூறுகிறேன்!"

"என்னிடத்தில் போதுமான பொருள் வசதியில்லை! அதைத்தேடிக்கொண்ட பிறகு தான் திருமணத்திற்கான ஏற்பாடு செய்ய இயலும்!"

"நீங்கள் பொருள் வசதியை எப்பொழுது தேடப்போகிறீர்கள்? திருமணம் எப்பொழுது செய்துகொள்ளப்போகிறீர்கள்?"

"இப்பொழுது வேண்டுமானாலும் பொருள் தேடப் புறப்படுகிறேன்! திரும்பி வந்தவுடன் திருமணத்திற்கான ஏற்பாடு செய்கிறேன்!"

"நான் உங்களைக் காணாமல் எப்படிப்பிரிந்திருப்பேன்?"

"அப்படியானால் பொருள்தேடவும் போக முடியாது; திருமணத்திற்கான ஏற்பாடும் செய்ய இயலாது!"

"நீங்கள் என்னதான் சொல்லுகிறீர்கள்?"

"விரைவில் திருமணம் நடைபெற வேண்டுமானால் நான் பொருள்தேடப் புறப்பட வேண்டும்; நான் இங்கேயே இருக்கவேண்டுமானால், திருமணம் அண்மையில் நடைபெற வழியில்லை!"

தலைவி திகைத்துப்போய் என்ன கூறுவது என்று தெரியாமல் விழித்துக்கொண்டு நிற்கிறாள்.

"நீ விடை கொடுத்தால் இப்பொழுதே நான் வெளியூருக்குப் புறப்படுகிறேன். என்ன சொல்லுகிறாய்? சொல்லு?" என்று தலைவன் திட்டவட்டமாகக் கேட்கிறான். தலைவி வேறு வழியின்றி அரைகுறை மனதோடு தலையை அசைத்துத் தன் இசைவைத் தெரிவிக்கிறாள்.

தலைவன் தலைவியிடம் விடைபெற்றுக் கொண்டவுடன், வெளியூருக்குப் புறப்படுவோம், பொருள் திரட்டி வருவோம், மிகச் சிறப்பாகத் திருமணத்தைச் செய்வோம் என்று களிப்போடு எண்ணிக்கொண்டு தேர் ஏறிப்புறப்படுகிறான். தலைவி பிரிவு ஆற்றாமல் கண்களிலே நீர்வழிய அவன் செல்லும் வழியை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டே நிற்கிறாள். பிறகு தோழி அவளை ஆறுதல்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாள்.

காதலன் பிரிந்து போய்விட்டான், இனி என்ன செய்வோம், எப்படிப் பிரிவு ஆற்றுவோம் என்றெல்லாம் எண்ணி ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள் தலைவி. தலைவியின் வருத்தத்தை மாற்றவும், அதனை அவள் மறந்திருக்கச் செய்யவும் ஆனவழிகளிலெல்லாம் ஆறுதல் கூறிப்பார்க்கிறாள் தோழி. ஏதொரு முறையாலும் தலைவி ஆறுதல் அடைந்தபாடில்லை.

மாலைப்பொழுதில் சோலைப்பக்கம் அழைத்துச்சென்று இயற்கை அழகுகளையும், செயற்கை அழகுகளையும் தலைவிக்குக் காண்பிப்பதன் மூலம், அவளைச் சிறிதுநேரம் வருத்தத்தை மறந்திருக்கும்படி செய்யலாம் என்ற எண்ணத்துடன் தோழி தலைவியைச் சோலைப் பக்கம் உலாவுக்கு அழைக்கிறாள். தலைவியும் தோழியின் அழைப்புக்கு இணங்கி உலாவச் செல்கிறாள்.

தோழி, தலைவியை அழைத்துக்கொண்டு, கடற்கரை ஓரமாய் உப்பங்கழிகளை அடுத்து விளங்கும் சோலையை நோக்கிச் செல்கிறாள். கடல் அலைகள் எழுந்து மடிந்து புரண்டுவிழும் காட்சிகளையும், செஞ்ஞாயிறு மேலத்திசையில் சென்று மறையும் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்துகொண்டே இருவரும் மணலில் நடந்து போகின்றனர். நெய்தல் மலர்கள் பூத்துக்குலுங்கும் உப்பங்கழிகள் எதிர்ப்படுகின்றன. அங்கு நின்று கழிகளின் அழகைப் பார்க்கிறார்கள். கொல்லும் தன்மையுடைய சுறாமீன்கள் கழிகளில் இயங்குவதைக்கண்டு அஞ்சி சற்றுத்தொலைவில் நின்றுகொள்கிறார்கள். புன்னைமலரின் பொன்னிறத் தாதுக்கள் காற்றடிப்பதால் வந்துபட்டு, நெய்தல் மலரின் கரியநிறம் மறைந்து, பொன்னிறமாக விளங்குவதைக் கண்டு மகிழ்கிறார்கள். பிறகு மணம் கமழும் தாழை மலர்கள் செறிந்து காணப்படும் வழி வழியே சென்று, புன்னைமரங்கள் அடர்ந்த சோலையில் தங்குகிறார்கள். தலைவி தன் ஆருயிர்க் காதலர் அருகே இல்லையே என்று கவலையுறுகிறாள். தோழி அவளது கவனத்தை வேறுவகையில் திருப்பி அவளை வருந்தாமலிருக்கச் செய்ய அரும்பாடுபடுகிறாள்.

தலைவி வீட்டிலே இருக்கும்போது மிகவாக வருந்துவதையும், சோலைப்பக்கம் உலாவச் செல்லும்போது, அந்த வருத்தத்தைச் சிறிது மறந்திருப்பதையும் காணும் தோழி, நாள் தோறும் மாலைவேளைகளில் தலைவியைக் கடற்கரைச்சோலைக்கு அழைத்துச்செல்வது என்று திட்டமிடுகிறாள். அவ்வாறே அழைத்துச் சென்று தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். தலைவியும் மாலைப்பொழுதுகளில் சோலைப் பக்கம் வேடிக்கை பார்க்கக் கிளம்புவதால், சிறிது மன அமைதி பெறுகிறாள்.

தலைவன் தான்திரும்பி வருவதாகக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டுச் சென்ற காலம் வந்தும், தலைவன் வராமை கண்டு பெரிதும் மனங் கலங்குகிறாள் தலைவி. தலைவனுக்கு ஏதேனும் கேடு சூழ்ந்ததோ, அல்லது பொருளின்மேல் கொண்டுள்ள மிக்க விருப்பத்தினால் தன்னை மறந்துவிட்டானோ அல்லது நெடுந்தொலைவு சென்று திரும்பிவரும் திசையறியாது தவிக்கிறானோ அல்லது அவன் திரட்டிக்கொண்டு வரும் பெரும் பொருளை யாரேனும் கள்வர் வழிமறித்துப் பிடுங்கிக்கொண்டு போக, அவர்களைத் துரத்திக் கொண்டுபோய்ப் பொருளை மீட்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறானோ என்றெல்லாம் பலவாறாகச் சிந்தித்து ஏங்குகிறாள். தலைவியின் கவலைகள் ஒவ்வொன்றுக்கும் ஆறுதல் மொழிகூறி அவளைத் தேற்றுகிறாள் தோழி.

ஒருநாள் மாலைப்பொழுது. தலைவியும் தோழியும் புன்னைமரச் சோலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். தலைவி, தலைவன் வராமையை நினைந்து நினைந்து வருந்திச் சோர்ந்து காணப்படுகிறாள். தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்பதை உணர்த்தித் தேற்றிக்கொண்டிருக்கிறாள் தோழி.

திடீரென்று மிக்க தொலேவிலிருந்து மணி ஒலி கேட்கத் தொடங்குகிறது. மணியோசை வந்த பக்கம் தோழி தன் செவிசாய்த்து உற்றுக் கேட்கிருள். அது தலைவனது தேரில் கட்டிய மணியொலியே என்பதை அறிந்து கொள்கிருள். உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, "தலைவர் வந்துவிட்டார்! தலைவர் வந்துவிட்டார்!" என்று சொல்லிக் கொண்டே சாலைப்பக்கம் ஓடிநின்று, மணியோசை வரும்பக்கம் எதிர்நோக்கி நிற்கிருள். தலைவி ஏதும் புரியாமல் திகைத்துப் போகிருள். தேரின் மணியோசையோடு, குதிரையின் குளம்படி ஓசையும், தேர் உருண்டோடி வரும் ஓசையும் சேர்ந்து வருகின்றன. தோழி தலைவனே வருகிருன் என்பதை ஐயமற உணர்ந்து கொள்கிருள். பிறகு தலைவனின் தேர் விரைவாக ஓடி வருவதைப் பார்க்கிருள். பறவை பறப்பது போன்று பொன்னுல் செய்யப்பட்ட அணிகலனையும், பிற அணிகலன்களையும் அணிந்துகொண்டு, குதிரை நாலுகால் பாய்ச்சலில் தேரை இழுத்துக்கொண்டு ஓடிவருவதையும், தேர்ப்பாகனது தாற்றுக்கோலால் தூண்டப்படாமல் வீடுவரும் நோக்கத்தோடு விரைந்து வருவதையும் பார்த்து, குதித்துக் கொண்டு, "ஓடி வா! ஓடி வா! இதோ பார் வந்துவிட்டார்!" என்று தலைவியை அழைக்கிருள். தலைவியும் ஓடிவருகிருள். அதற்குள், தேர் தோழியின் அருகில் வந்து நிற்கிறது. தலைவன் தேரிலிருந்து விரைந்து குதித்துத் தலைவியை நோக்கி ஓடுகிருன். தலைவனைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கி, நிலை தடுமாறி நடக்க முடியாமல் நடந்து வருகிருள். தலைவன் தாவிப்போய்க் கட்டியணைத்துக் கொண்டு, அவள் உச்சி முகர்ந்து காதல் மொழி பகர்கிருன்.

இனித் திருமணம் இனிது நடந்தேறும், தலைவியின் கவலையும் நீங்கும், தன்னுடைய பொறுப்பும் கழியும் என்று எண்ணித் தோழி மனமகிழ்கிருள்!

* * *

இது நற்றிணை 78-ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு எழுந்த சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் வரைமலிந்தது என்னும் துறையைச் சார்ந்ததாய் நெய்தல் திணையின் பாற்பட்டதாகும். இதனை இயற்றியவர் கீரங்கீரனுர் என்னும் புலவராவர். இவருடைய தந்தையின் பெயர் கீரன். எனவேதான் இவர் கீரங்கீரனுர் என்று அழைக்கப்பெறுகிருர். இவர் நெய்தல் திணையைப் புனைந்து அழகுறப் பாடியுள்ளார். இவர் பாடியதாக இந்தச் செய்யுள் ஒன்றுதான் கிடைத்துள்ளது.

கோட்சுரு வழங்கும் வாட்கேழ் இருங்கழி
மணியேர் நெய்தல் மாமலர் நிறையப்
பொன்நேர் ண்தாதுநு புன்னை தாஅம்
வீழ்தாள் தாழைப் பூக்கமழ் கானல்
படர்வந்து நலியும் சுடர்செல் மாலை
நோய்மலி பருவரல் நாமிவண் உய்கம்
கேட்டிசின் வாழி தோழி தெண்கழி
வள்வாய் ஆழி உள்வாய் தோயினும்
புள்ளுநிமிர்ந் தன்ன பொலம்படைக் கலிமா
வலவன் கோலுற அறியா
உரவுநீர்ச் சேர்ப்பன் தேர்மணிக் குரலே.

[நற்றிணை—78]

[பொழிப்புரை தோழீ! வாழி! தெளிந்த உப்பங்கழியின் கணுள்ள நீரிடத்துப் பெருமைவாய்ந்த தேருருளையின் உள்வாய்ப் பக்கம் அமுங்கப்பெற்றுலும், பறவை பறந்துசென்ருற் போன்று பொன்னுல் செய்யப்பட்ட அணிகலன் முதலியவற்றை யுடைய மனஞ்செருக்கிய குதிரை தேர்ப்பாகன் தன்

தாற்றுக்கோலாலே தூண்டப்பட்டறியாத பரந்த கடல்நீரையாளும் சேர்ப்பனது தேரின் மணி ஒலிக்குங் குரலைக் கேட்பாயாக; கொல்லுந்தன்மையுள்ள சுறுமீன் இயங்குகின்ற ஒள்ளிய நிறத்தை யுடைய பெரிய உப்பங்கழியிடத்து மலர்ந்த நீலமணி போன்ற நெய்தலின் கரியமலர் நிறையுமாறு புன்னையின் பொன்போன்ற நுண்ணிய தாது பரக்கும் விழுது ஊன்றிய அடியையுடைய தாழைமலர் கமழ்கின்ற கடற்கரையிலுள்ள சோலையின்கண்ணே துன்பம் வந்து மேன்மேலும் வருத்துகின்ற, கதிரவன் மறையும் மாலைப்பொழுதில் காமநோய் மிகுதலால் ஆகிய மிக்க துன்பத்தினின்றும் நாம் இனி இங்கு உய்ந்து வாழ்வோமாக!

வாள்கேழ் — ஒள்ளிய நிறத்தையுடைய; மணி—நீலமணி; ஏர் – ஏத்த; கானல்—கடற்கரைச் சோலை; பருவரல்—துன்பம்; கலிமா—குதிரை; வலவன்—தேர்ப்பாகன்: உரவுநீர்—கடல்நீர்.]

இல்லற வாழ்வை இனிது நடத்துவதற்கு ஏற்றவகையில் போதுமான பொருள்வளம் இருந்தால் ஒழிய, தலைமகன் திருமணம்செய்து கொள்வது அவ்வளவு சிறப்புடைத்தாகாது என்பது இச்செய்யுளில் உணர்த்தப்படுகிறது.

பொருள் சேர்த்துக்கொண்டு திரும்பும் தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளும் உறுதிப்பாட்டோடு வருவதால், இனி ஊராரைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை என்ற எண்ணத்துடன்தான், தேரின் மணி மிகவாக ஒலிக்க வெளிப்படையாகவே விரைந்து வரத் தலைப்படுகிறான்.

குதிரை பூட்டிய தேரைப் போக்குவரத்துக் கருவியாகக் கொள்ளுதல், குதிரைக்கு பொன்னால் ஆன அணிகலன்களை அணிவித்தல், தேர்ப்பாகன் குதிரையை ஓட்டத் தாற்றுக் கோலைக் கையிலே பிடித்திருத்தல், தேரில் மணிகள் கட்டியிருத்தல் போன்ற பழக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

காதலால் பீடிக்கப்பட்டுத் தனித்து வாழ் கிறவர்களை மாலைப்பொழுது மிகவும் வருத்தும் என்பது உணர்த்தப்படுகின்றது.

புன்னையின் பொன்னிறத் தாது, நெய்தல் மலர் நிறையப்படியும் என்பது பொருள் திரட்டிவரும் தலைவன், தலைவிக்கும் தலைவி யைச் சேர்ந்த உற்றார்க்கும் நிரம்பப் பொருள் கொடுப்பான் என்பதை உணர்த்தும் உள்ளுறை உவமமாகும்.

தாழம்பூவின் மணம் கானல் எங்கும் கமழும் என்பது தலைவனது திருமணம் நாடெங்கும் மாட்சிமைப்படும் என்பதை உணர்த்தும் உள்ளுறை உவமமாகும்.

தே-வி யும் கிளியும்

ஒருசமயம், அரசாங்கத்தாரால் எழுதப்பட்ட பாடப் புத்தகங்களைத் திருத்தி அமைக்க தே-வி அவர்களும், இன்னும் சில பெரியார்களும், அவர்களுக்கு உதவி புரிவார் சிலரும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருநாள், அவர்கள் எடுத்துக்கொண்ட புத்தகத்தில் 'கிளி' என்னும் பாடம் வந்தது. தலைப்பில் கிளியின் படமும் வரையப் பட்டிருந்தது. தே-வி, எல்லோரையும் புத்தகத்தை மூடும்படிச் செய்துவிட்டு ஒரு கேள்வி போட்டார். 'கிளிக்கு விரல் முன்னே எத்தனை? பின்னே எத்தனை?' என் பதுதான் அக்கேள்வி. 'இது தெரியாதா? முன்னே மூன்று விரல்; பின்னே ஒரு விரல்' என்றனர் சில இளைஞர்கள். யாவரும் அதுவே சரி என்று கருதினர்கள். உடனே தே-வி யாவரையும் புத்தகத்தைத் திறந்து படத்தைப் பார்க்குமாறு கூறி னார். படத்திலுள்ள கிளியும் முன்னே மூன்று விரல்களைக் காட்டிக்கொண்டுதான் இருந்தது. 'இது பிழை; கிளிக்கு விரல் முன்புறம் இரண்டு! அதுபோல் பின்புறம் இரண்டு உண்டு' என்றதும் யாவரும் ஒரு விரலை மூக்கின் மேல் வைத்து உட் கார்ந்திருந்தனர்.

பண்டைய இந்திய நாணயங்கள்

(குமாரி ஆர். வனஜா, எம். ஏ.)

நாணயங்களின் மதிப்பையும் உயர்வையும் நமக்கு முதன்முதலில் உணர்த்தியவர்கள் ஐரோப்பியர்கள். நமது இந்திய அரசாங்கமும் சென்ற நூற்றாண்டிலிருந்து, கல்வெட்டிலாகா ஒன்று நிறுவிக் கல்வெட்டுகளைத் தக்க அறிஞர்களைக்கொண்டு படி எடுப்பித்தும், புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும், ஆங்காங்குக் கிடைக்கும் செப்பேடுகளையும் பழைய நாணயங்களையும் சேகரித்துவருகின்றார்கள். இவ்விதம் கண்டெடுக்கப்பட்ட பழைய நாணயங்களின் உதவியால், நமக்கு முக்கியமான - அரியபல ஆதாரங்கள் கிடைக்கின்றன. அவைகளைக் கொண்டு நாம் ஒருகுறிப்பிட்ட தேசத்தின் சமய, பொருளாதார நிலைமையையும், சரித்திர சம்பந்தமான பல உண்மைகளையும் அறியமுடிகிறது. இதற்கு நமது பண்டைய இந்திய நாணயங்களே ஒரு தக்க சான்றாகும்.

பண்டைய இந்திய நாணயங்கள் யாவும், ஊர்பெயர் அற்றவை. பாக்ட்ரியா, கிரேக்கமன்னர்களின் (Bactrians Greeks) தொடர்பு ஏற்பட்ட காலத்திலிருந்து இந்திய அரசர்களும் தம்பெயரோடு கூடிய நாணயங்களை வெளியிடலானார்கள். இவைகளின் உதவியால் நாம் அரசவழிகளையும், காலங்களையும் நிர்ணயித்துக்கொள்வதோடு அல்லாமல் திருத்தியும் கொள்ளலாம்.

வேந்தர்சிலர் இருமொழியில் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர். அவைகளின் துணைகொண்டே ஆங்கில அறிஞர் ஒருவர், அசோகரின் ‘பிராமி’ கல்வெட்டுகளைப் படித்ததாக அறிகிறோம். அதைத் தவிர, நாம் பண்டைய வேந்தர்களின் உருத்தோற்றத்தைப்பற்றி இந்திய-கிரேக்கமன்னர்களின் நாணயங்கள்மூலம் அறிகிறோம். மன்னர்களின் உருத்தோற்றத்தை நாணயங்களின்மேல் வெளியிடும் பழக்கமானது முஸல்மான்கள் காலம்வரை நீடித்து வந்தது.

பொன், வெள்ளி, செப்பு நாணயங்கள் ஏராளமாக அகப்படுகின்றன. இவற்றைத்தவிர, பண்டைய இந்தியர்கள் கலப்பு உலோகங்களையும் உபயோகித்துவந்தார்கள். ஆந்திரர்கள் அல்லது சாதவாஹனர்கள் ஈயநாணயங்களோடு, ‘போடின்’ (Potin) எனச் சொல்லப்படும் ஒருவித கலப்பு உலோகத்தில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார்கள். சில இராஜபுத்திர வம்சமன்னர்கள் ‘எலக்ட்ரம்’ (Electrum) எனச் சொல்லப்படும் உலோகத்திலும், ‘பில்லன்’, (Billon) எனும் உலோகத்திலும் நாணயங்கள் செய்துள்ளார்கள்.

நாணயநிறுவைக்குப் பண்டைய காலத்தில் விதைகளைப் பயன்படுத்தினார்கள். ‘ரதி’ விதையானது அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. புராணக்கள் எனச் சொல்லப்படும் ஒருவகைப்பண்டைய நாணயங்கள் இந்த நிறுவையை அடிப்படையாகக் கொண்டவை. தென்னிந்தியாவில் மஞ்சாடி (5குன்றிமணி) கழஞ்சு என்ற இரண்டுவித நிறுவைகளைப் பின்பற்றி நாணயங்கள் வெளியிடப்பட்டன.

இந்தநிறுவைகள் ஷெர்ஷாசூர் காலம்வரை நீடித்திருந்தன. அதற்குப் பிறகு அவ்வரசன் 175குன்றிமணி எடையுள்ள வெள்ளி ரூபாய்களை வெளியிட்டான். இன்றைய இந்திய ரூபாய் ஷெர்ஷாவினுடைய ரூபாய் நிறையைப் பின்பற்றியிருக்கிறது.

புராணக்கள் என வழங்கப்படும் நாணயங்கள்தாம் மிகப்பழமையான நாணயங்கள். இந்நாணயங்களின்மேல் நாம் பல விசித்திரமான சின்னங்களைக்காண்கிறோம். இச்சின்னங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பது இன்றுவரை ஒருமர்மமாகவே இருந்துவருகிறது. அறிஞர்கள், இவை மௌரியர் காலத்தவையாகவோ அல்லது இன்னும் பழமையானவையாகவோ இருக்கலாம் என நினைக்கிறார்கள். சென்னை மியூஸியத்திலுள்ள ஒருபுதைக்குவியல் மிகவும் புதுமையானதாக இருக்கிறது. இந்நாணயங்களின் பின்புறம் காணப்படும் சின்னம் பாண்டிய இலச்சினையான மீன்போல் இருக்கிறது. ஆகையால் இதைப் பாண்டிய வெளியீடு என்று சொல்லாம். இது கி. பி. 2-வது நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று நினைக்கவும் இடமிருக்கிறது.

பாக்ட்ரியா, கிரேக்கமன்னர்களின் நாணயங்களைப் பின்பற்றி இந்தோ-கிரேக்கர்கள் தங்களுடைய நாணயங்களின்மேல் ஒருபக்கத்தில் கிரேக்கமொழியிலும், மற்றொரு பக்கத்தில் கரோஷ்டியிலும் பெயரைச் செதுக்கினார்கள்.

சிலமன்னர்களின் உருவங்களையும் நாம் இந் நாணயங்களின்மேல் காணமுடிகிறது.

கி. பி. 1-வது நூற்றாண்டில் அந்நிய முறை கைவிடப்பட்டு, இந்தியமுறையில் நாணயம் அடிக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று. கிரேக்கக் கடவுள்களுக்குப் பதிலாக இந்தியக்கடவுள் களை நாம் முதன்முதலாக நாணயங்களின்மேல் காண்கின்றோம். வீமாகட்பீஸஸ் (Vema-kadphises) போன்ற குஷான் மன்னர்களின் நாணயங்களின்மேல் சிவன், நந்தி முதலிய சைவச்சின்னங்கள் காணப்படுகின்றன. குஜூலா கட்பீஸஸ் (Kujula Kadphises) என்பவன் புதுச்செப்பு நாணயங்களை வெளியிட்டான். அச்செப்புக்காசுகளில் யுவராஜா, மகா ராஜா, ராஜாதி ராஜா என்னும்பட்டங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் மற்றொரு விருதைநோக்கின் அக் குஷான் மன்னன் பௌத்தசமயத்தில் பற்றுடையவன் என்பதை அறிகிறோம். வீமாகட்பீஸஸ் வெளியிட்ட பொன் நாணயங்களின் ஒருபுறத்தில் மன்னன் வடிவமும், மற்றொரு புறத்தில் சிவபெருமானின் வடிவமும் காணப்படுகின்றன. இக்குலத்தில் சீரோங்கியவன் கனிஷ்கன் ஆவான். கனிஷ்கனின் நாணயங்கள் வடஇந்தியாமுழுவதும் கிடைக்கின்றன. இதிலிருந்து வடஇந்தியாமுழுவதும் கனிஷ்கன் ஆட்சியின் கீழ் இருந்தது என்பது தெளிவாகிறது. கட்பீஸஸ் என்ற அரசனைப்போல கனிஷ்கனும் புத்தர் உருவங்கொண்ட நாணயங்களை வெளியிட்டான். இதிலிருந்து இவ்வரசனும் பௌத்தமதத்தில் பற்றுடையவன் என்று அறிகிறோம். குஷான் மன்னர்களின் மற்றநாணயங்களில் ஒருபக்கம்மன்னன்யாகம் செய்து கொண்டிருப்பதையும், மற்றொருபக்கம் ஒருதேவதையையும் காணலாம். நாணயத்தில் ஒருபுறம் தேவதைபொறிக்கப்படும் வழக்கத்தைப் பிற்கால இந்திய மன்னர்கள் பலர் பின்பற்றியுள்ளார்கள்.

நயத்திலும் வேலைத்திறத்திலும் சிறந்த நாணயங்கள் குப்தமன்னர்களால் வெளியிடப்பட்டன. குப்தநாணயங்களுக்கு இணையாக நம்நாட்டில் வேறு எந்த நாணயங்களும் இல்லை. கி. பி. 4-வது 5-வது நூற்றாண்டுகளில் குப்தர்கள் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த பொற்காசுகளை வெளியிட்டார்கள். இவர்களுடைய நாணயங்கள் மன்னரின் உருவத்தை ஒருபுறத்திலும் லக்ஷ்மியை மற்றொரு புரத்திலும் சித்திரிக்கின்றன. மன்னர் உருவத்தின் பக்கத்தில் பிராகிருத மொழியில் மன்னரின் பெயரும் அவருடைய விருதுகளும் காணப்படுகின்றன. குப்த நாணயங்களுள் மிக முக்கியமானவை சமுத்திர குப்தனின் நாணயங்கள் இந்நாணயங்களின் ஒருபுறத்தில் சமுத்திரகுப்தன் வீணை வாசித்துக் கொண்டிருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

சமுத்திரகுப்தன் ஒரு பெரியவீரன் மட்டுமல்ல, கலைஞனும்கூட என்பதை இதிலிருந்து அறியலாம். இவற்றைத்தவிர அஸ்வமேத யாகத்தையும், சிங்கம், காண்டாமிருகம் முதலிய மிருகங்களை அரசன் கொல்வதையும், குதிரைவீரனையும் சித்திரிக்கும் நாணயங்களைக் குப்தமன்னர்கள் வெளியிட்டார்கள். வெள்ளி, செப்பு குப்தநாணயங்கள் மிகக்குறைவு. குப்த நாணயங்களைப்பற்றிப் பேசும்போது நமக்குப் பாகியன் (Fa-Hien) என்ற சீனக்கவி எழுதியிருப்பது நினைவுக்கு வருகின்றது. 'அழகிய பொற்காசுகள் குப்தரால் வெளியிடப்பட்டிருந்தும் மக்கள் சோழியையே நாணயமாகக் கையாளுகின்றனர்' என்று எழுதியுள்ளான். இதற்குத்தக்க காரணத்தை நம்மால் அறிய முடியவில்லை. குப்தர்கள் வைணவர்கள் என்பது அவர்கள் நாணயங்களின் மேலுள்ள கருடஇலச்சினையின் மூலமும், பரமபாகவதர் என்ற விருதுவின்மூலமும் நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

வங்காளத்தில் குப்த நாணயங்களைப்போல் பல நாணயங்கள் அகப்பட்டுள்ளன. ஆனால் இவை குப்த நாணயங்களைப்போல் அவ்வளவு நேர்த்தியாக இல்லை. குப்தர்களுக்குப் பின் தோன்றிய ஷர்ஷவர்த்தனன் தன்னுடைய நாணயங்களின்மேல் தன்உருவத்தை ஒருபுறமும், மயிலின்உருவத்தை ஒருபுறமும்சித்திரித்திருக்கிறான். இந்நாணயங்களில் காணப்படும் சிலாதித்யன் எனும் பட்டம் இவனுடைய சிறப்புப் பெயர் என்பது விளங்குகின்றது.

ஹர்ஷவர்த்தனின்காலத்திற்குப்பின் இராஜபுத்திரர் என்னும் பெயரால் சிறப்பிக்கப்பெற்ற சில அரசவழிகள் தோன்றின. இவர்கள் வெளியிட்டசெப்பு, பில்லன் நாணயங்களின்மேல் குதிரைவீரனும், நந்தியும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். நந்தியுடன் அரசனின் பெயர் தேவ நாகரியில் பொறிக்கப் பெற்றது. கி. பி. 12-வது நூற்றாண்டுவரை இராஜபுத்திர நாணயங்கள் நடைமுறையில் இருந்துவந்தன. பிற்கால இந்திய மன்னர்பலரும் இம்முறையைப் பின்பற்றி 17-வது நூற்றாண்டுவரை நாணயங்கள் வெளியிட்டார்கள்.

இஸ்லாமியஆட்சியின்தொடக்கத்திலிருந்து (கி.பி.13-வது நூற்றாண்டு)நாணயங்களில்மாறுதலைக் காண்கின்றோம். மன்னர்உருவத்தைப் பொறிக்கும்வழக்கம் கைவிடப்பட்டு, மன்னர் பெயரும் விருதுகளும் பாரசீகமொழியில் ஒரு

புறமும், 'கலீமா' என்ற இஸ்லாமிய தத்துவம் மற்றொருபுறமும் பொறிக்கப்படும் வழக்கம் கையாளப்பட்டது.

மொகலாய நாணயங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. மொகலாயர் வெளியிட்ட தங்க மொஹராக்கள் மிகவும் அழகானவை. அக்பர் தம்முடைய புதிய மதமான தீன்-இலாஹி (Din-Ilahi)யை ஸ்தாபிப்பதற்கு நாணயங்களை ஒரு கருவியாகக்கொண்டார். ஜஹாங்கீரின் நாணயங்கள் மொகலாய நாணயங்களுள் சிறந்தவை. மன்னர் உருவமும் நூர்ஜஹானின் பெயரும், பன்னிரண்டு ராசிகளின் சின்னங்களும் (Zodical Sings) கொண்ட ஜஹாங்கீரின் நாணயங்கள் குறிப்பிடத்தக்கவை.

தென்னிந்திய நாணயங்களின் வரலாறு வடஇந்திய நாணயங்களின் வரலாற்றுக்கு முற்றும் மாறுபாடானது. போடிநாயக்கனூர் என்ற இடத்தில் கிடைத்த புதைக்குழியலைத் தவிர தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட மற்ற எல்லாப் புராணுக்களும், வடஇந்தியப் புராணுக்களை எல்லாவிதத்திலும் ஒத்துள்ளன. இதிலிருந்து புராணுக்கள் தென்னிந்திய அரசவம்சத்தினரால் பிரத்தியேகமாக வெளியிடப்படவில்லை என்பது தெளிவாகிறது. மிகப்பழமையான தென்னிந்தியப் பொன் நாணயங்கள் வட்டவடிவமுள்ளன. இவற்றின்மேல் காணப்படும் சின்னத்தை விவரிக்கமுடியவில்லை. இதன்பிறகு நடைமுறையில் வந்ததாமரைப்பூ சின்னத்தோடு கூடிய நாணயங்களைப் 'பத்மடங்காக்கள்' என அறிஞர் வழங்குகின்றார்கள். இறுதியில் அச்சடிக்கப்பட்ட (Die Struck) முத்திரையோடு கூடிய நாணயங்கள் வெளிவந்தன. இவற்றுள் விஜயநகர நாணயங்கள் மிகவும் சிறந்தவை. 5 குன்றிமணி எடையுள்ள பணம் என்று சொல்லப்படும் மிகச்சிறிய தென்னிந்திய நாணயங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. கி. பி. 15, 16-வது நூற்றாண்டுகளில் இவை மிகவும் பிரசித்தமாயின.

தென்னிந்திய அரசர்கள் பொன், செப்பு நாணயங்களைப்பெரிதும் உபயோகித்தார்கள். தென்னிந்திய வெள்ளி நாணயங்கள் மிகக் குறைவு. இந்நாணயங்களின் மேலுள்ள சின்னங்களிலிருந்து அவை எந்த வம்சத்தினரால் வெளியிடப் பெற்றவை என்று அறியமுடிகிறது.

குரும்பர்கள் என அழைக்கப்படும் ஒரு குறுநில அரசவம்சத்தினரின் நாணயங்களின்மேல் பாய்மரக்கப்பலின் வடிவம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

தக்கணத்தின் வடமேற்குப் பகுதியில் கிறிஸ்து பிறப்பதற்குமுன் சாதவாஹனரின் (ஆந்திரர்) ஆட்சி நிறுவப்பெற்றது. கி. பி. 2வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கௌதமிபுத்திர ஸ்ரீசதகர்ணி என்பான் பட்டமெய்தினன். இவ்வரசன் தன் நாணயங்களைத்தவிர நகபாணன் என்னும் க்ஷகாரத குலத்தைச் சேர்ந்த தன்னுடைய விரோதியின் நாணயங்களையும், தன்பெயரால் அச்சடித்து வெளியிட்டான். சாதகாவனரின் நாணயங்களின் மூலம் நாம் அவர்களின் வம்சசரித்திரத்தை அறிகிறோம். பௌத்தமதச் சின்னங்களையும், பிராமியில் அரசன் பெயரையும், யானை, குதிரை, சிங்கம், ஒட்டகம் முதலிய மிருகங்களையும், ஸ்தூபி, கப்பல் முதலிய சின்னங்களையும் இந்நாணயங்களின்மேல் காணலாம்.

மேற்கூறிய ஆந்திரநாணயங்களில் காணப்படும் சின்னங்களைத் தென்னிந்திய சரித்திரத்தில் பிரசித்திவாய்ந்த ஒருவம்சத்தினரான பல்லவஅரசர்களின் நாணயங்களிலும் நாம் காண்கிறோம். மற்றும் "ஸ்ரீபரன்", "ஸ்ரீநிதி" என்ற விருதுகளைக்கொண்ட நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்விருதுகள் முறையே முதலாவது மகேந்திரவர்மனையும், இராசசிம்ம பல்லவனையும் குறிக்கும்.

தமிழக மூவேந்தரில் ஒருவரான பாண்டியர் முதன்முதலில் சதுரவடிவமான செப்புக்காசுகளை வெளியிட்டனர். இவற்றின்மேல் யானை, ரிஷபம், விளக்கு முதலிய சின்னங்கள் ஒரு புறமும், பின்புறத்தில் மீனைப்போன்ற ஒரு சின்னமும் காணப்படுகின்றன. 7-வது, 10-வது நூற்றாண்டுகளில் மீன் இலச்சினை நாணயங்களின்மேல் பெரிதும் உபயோகிக்கப்பட்டது. மற்றும், மன்னர்களின் சிறப்புப் பெயர்களும் பொறிக்கப்பட்டன. 'அவனிபசேகரன் கோளகை' என்றசிறப்புப்பெயர் ஸ்ரீமாரன் ஸ்ரீவல்லப பாண்டியனைக் குறிக்கும். 'சோனாடுகொண்டான்', 'எல்லாந் தலையானான்', சேரநாடுகொண்டான்', 'கச்சிவழங்கும் பெருமாள்' என்ற விருதுகள் அக்காலத்துப் பாண்டியஅரசர்களின் சிறப்பையும், வல்லமையையும் விளக்குகின்றன. சிலபாண்டிய நாணயங்களின்மேல் சோழஇலச்சினையான புலியும், சேர இலச்சினையான வில்அம்பும் பாண்டிய இலச்சினையான மீனுடன் காணப்படுகின்றன.

சோழர்கள் பாண்டியரை வென்ற பிறகு 9-வது நூற்றாண்டிலிருந்து 13-வது நூற்றாண்டுவரை தமிழகத்தில் பேரரசுபுரிந்தார்கள். சோழஇலச்சினையான புலியை இவர்கள் நாணயங்களில் காணலாம். இவர்களின் வழிவந்தவர்களான ரேணாண்டுச் சோழர்கள்

(தெலுங்கு நாட்டுச்சோழர்கள்) சிங்கஇலச்சினையைத் தங்கள் நாணயங்களின்மேல் பொறித்தார்கள். சோழர் காலத்தில் பொன் செம்பு நாணயங்களைத்தவிர, கருங்காசு ஈழக் கருங்காசு என்னும் வெள்ளிக்காசுகளும் நடை முறையில் இருந்துவந்தன. கல்வெட்டுகளில் அக்கம் திரமம், கச்சாணம் என்று பல்வேறு நாணயங்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இவையன்றித் துளைப்பொன் என்ற பொற்காசுகளும் இருந்தன. இவை அரசாங்க அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டுத் துளையிடப்பட்டவை. கி. பி. 985-க்கு முன் பொன், வெள்ளி, சோழ நாணயங்களின்மேல் கயல் வடிவம் சோழ இலச்சினையான புலியுடன் காணப்படுகிறது. இதன் பிறகு சோழச் செப்புக்காசுகளின் இருபுறமும் ஓர் உருவத்தையும் (மன்னன் ?), தேவநாகரியில் மன்னரின் பெயரை ஒருபுறமும் காண்கின்றோம். இராஜராஜன் ஈழவெற்றிக்குப்பிறகு லங்கேஸ்வரன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட மாடைகளை (பொன்நாணயங்களை) வெளியிட்டான். விஷ்ணுபாதன், முரளீதரன் முதலியசின்னங்களையும்' இராஜ இராஜன் நாணயங்களில் காணலாம். குதிரைவீரனைச் சித்திரிக்கும் இராஜ ராஜனின் நாணயங்கள் மிகவும் பிரசித்தமானவை. ஆனால் இவை எளிதில் அகப்படுவதில்லை.

இராஜேந்திர சோழனின் நாணயங்களின் மேல் மன்னன் பெயரைச் சிலவற்றிலும், கங்கை கொண்ட சோழன் என்றசிறப்புப்பெயரைச்சிலவற்றிலும்காண்கின்றோம். சோழநாணயங்களின்மேல் 'புலியுடன்கயலை ஒருபுறமும், வில் அம்பு இவற்றை ஒருபுறமும் சித்திரிக்கும் வழக்கம் குலோத்துங்கசோழன் காலத்தில் (1070-1120) A. D. கையாளப்பட்டது.

'வீரகேரளஸ்ய' என்று பொறிக்கப்பட்ட சேர வெள்ளிநாணயங்கள் கி. பி. 11-12-வது நூற்றுண்டு சேரஅரசர்களால் வெளியிடப்பட்டவை. முக்கியமாக இரவிவர்மன் குலசேகரன் மாறவரமன் குலசேகரன் இவ்விரு அரசர்களின் நாணயங்கள் பேரளவில் கிடைக்கின்றன.

பத்மடங்காக்கள் என்னும் தாமரைப்பூ அடையாளத்தைக் கொண்ட நாணயங்கள் முதன் முதலில் கடம்பர்களால் வெளியிடப்பட்டன. 11-12வது நூற்றுண்டில் மேற்கிந்தியச் சாளுக்கிய மன்னர்கள் தாமரைப்பூவிற்குப் பதிலாகச் சிங்கஇலச்சினையையும், கன்னட மொழியில் விருதுகளையும் கொண்ட இவ்விதத நாணயங்களை அச்சடித்தார்கள். பின்வந்த தெலுங்கு சோழவம்சத்தினரும் கன்னட ஹொய்சளர்களும் இவ்வித நாணயங்களை வெளியிட்டனர்.

கங்கபாடியைச்சேர்ந்த கங்கவம்சத்தினரும், வாரங்கலைச்சேர்ந்த காகதீய வம்சத்தினரும் விருஷப இலச்சினையைக்கொண்ட நாணயங்களை வெளியிட்டனர். ஒரிஸ்ஸாவை ஆண்ட கஜபதிகள் ஆனைக்காரர்கள் [illegible] முத்திரையோடு கூடிய நாணயங்களை வெளியிட்டார்கள்.

விஜய நகரநாணயங்கள் மிகவும் நேர்த்தியானவை. இவற்றின்மேல் ரிஷபம், யானை, கண்டபேருண்டபறவை முதலியவைகளைக் காணலாம். கிருஷ்ணதேவராயர் வெளியிட்ட துர்க்கி பகோடாக்களின்மேல் விஷ்ணுவையும் லக்ஷ்மியையும் ஒருபுறத்திலும், தேவநாகரியில் மன்னரின் பெயரை மற்றொருபுறத்திலும் காணலாம். இராமராயர் கண்டிகாடா பகோடாக்கள் என்ற நாணயங்களை வெளியிட்டார்.

'மூன்றுஸ்வாமி பகோடாக்கள்' என்னும் பிரசித்திவாய்ந்த தென்னிந்திய நாணயங்களை முதன் முதலாக வெளியிட்டவன் திருமலைராயன். பிற்கால விஜயநகர நாணயங்களின் மேல் மன்னன் பெயர் கன்னடத்தில் காணப்படுகிறது.

16-வது 17-வது நூற்றுண்டுகளில் மதுரை திருநெல்வேலி நாயக்கர்களும், இராமநாதபுரம் சேதுபதிகளும் நாணயங்களின்மேல் தங்கள் பெயரைத் தமிழ்மொழியில் வெளியிட்டார்கள். இக்காலத்துச் செப்புநாணயங்களில்தெலுங்குமொழியில் 'ஸ்ரீவீர'என்ற பெயரையும், முகப்பில் ஹனுமான், கணேசன், யானை, விருஷபம் முதலிய சின்னங்களையும் காணலாம்.

கிருஷ்ணதேவராயர் நடை முறையில் கொண்டுவந்த துர்க்கி பகோடாக்களைப் பின்பற்றி 17-வது, 18-வது நூற்றுண்டுகளில் இக்கேரி நாயக்கர்களும், சித்தல்துர்க்கம் நாயக்கர்களும் நாணயங்கள் வெளியிட்டார்கள். பெட்னூரிலும் இவ்வித நாணயங்கள் வெளிவந்தன. ஹைதர்அலி பெட்னூரைத் தன் வசமாக்கிக் கொண்டபொழுது இவ்வித நாணயங்களை 'ஹி' என்ற எழுத்தைப் பின்புறத்தில் அடித்து மைசூரில் வெளியிட்டான். பிறகு பாரசீக மொழியில் தேதியைப் பின்புறத்திலும், 'ஹி' என்ற எழுத்தைமுகப்பிலும் அடித்து நாணயங்கள் வெளியிட்டான்.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியும், டச்கிழக்கிந்தியக் கம்பெனியும் இந்திய முறைகளை, முக்கியமாக விஜயநகர முறையைப் பின்பற்றி நாணயங்கள் அடித்தன.

'போர்டோ நோவோ' (Porto Novo) என்ற டச்பகோடாக்கள், வேங்கட பகோடாக்களைப் பின்பற்றி வெளியிடப்பட்டவை. ஆங்கிலேயக் கம்பெனியார் சென்னையிலிருந்து நட்சத்திரப் பகோடாக்கள் ஒற்றைஸ்வாமி பகோடாக்கள் முதலிய நாணயங்களை வெளி யிட்டனர்.

கி. பி. 1814-16ல் வெள்ளிரூபாய் இந்திய நாணயமாக நிர்ணயம் செய்யப்பட்டது. 1835 லிருந்து ரூபாயின் ஒருபுறம் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் பெயரும், மற்றொருபுறம் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரும் வெளியிடப்பட்டன. கம்பெனி ஆதிக்கத்தின் இறுதிவரை இம்முறை கையாளப்பட்டது.

(மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்-1956)

பாலைவனக் கப்பல்

மிருகங்களைப்பற்றிப் பலவிதமான கதைகள் கூறப்படுகின்றன. அவற்றில் சில நம்பத்தகுந்ததாகவும் பல நம்பத்தகாதவைகளாகவும் இருக்கின்றன. 'யானைக்கு நல்ல நினைவுத்திறன் உண்டு' என்ற உண்மையை நம்ப மறுக்கும் நம்மில் சிலர் பாலைவனத்தில் நீண்ட தூரம் செல்லும் ஒட்டகம் தனக்குத் தேவையான தண்ணீரைத் தன்னுடன் கொண்டு செல்லுகிறது என்ற கூற்றை நம்புகிறோம்.

நம்புவதற்குக் கடினம்தான் என்றாலும் அது மறுக்கமுடியாத உண்மையாகும். கோடைகாலத்திலே, வெய்யல் கொளுத்தும்வேளையிலே ஒருதம்ளர் தண்ணீரின்றி நாம்படும்துயரத்தை அறிந்ததால், பாலைவனத்தில் வெப்பத்தின் நடுவில் பெரும் சுமையையும் சுமந்துகொண்டு மூன்று நாட்கள்கூட 'குடிப்பதற்கு எதுவும்' இன்றி ஒட்டகம் செல்வது நமக்கு வியப்பையூட்டுகிறது.

ஒட்டகம் தன் உடம்பினுள் அதிகமாக $1\frac{1}{2}$காலன் குடி தண்ணீரைச் சுமந்து செல்கிறது. தண்ணீர் தேவைப்படும்பொழுது ஒட்டகம் இந்தச் சேமிப்பில் இருந்து சிறிதுசிறிதாகத் தண்ணீரைப்பயன் படுத்திக்கொள்கிறது. நம்மில் சிலர் நினைப்பதைப்போல் ஒட்டகம் தன் திமிலில் (humP) தண்ணீரைச் சேர்த்து வைப்பதில்லை. அந்த பாகத்தில், ஒட்டகம் கொழுப்பு சக்தியைச் சேர்த்து வைக்கிறது. பாலைவனத்தில் மணலைத் தவிர வேறு புல், பூண்டுகள் கிடையாது ஆகையால் இந்தக்கொழுப்புசக்தியை உணவு தேவைப்படும்பொழுது பயன்படுத்திக்கொள்கிறது. தண்ணீரைத்தன் வயிற்றில் சேமித்து வைக்கிறது.

ஒட்டகத்தின் வயிறு புதுவிதமான அமைப்பையுடையது. சிறு சிறுஅறைகள் போன்று இருக்கும் இதன் வயிற்றில் தண்ணீரை 'பிளாஸ்க்கில்' சேமிப்பது போல் கொண்டுசெல்கிறது. ஒவ்வொரு அறையும் நிரப்பப்பட்டது. தடிப்பான தசையால் மூடப்பட்டிருக்கிறது.

பாலைவனத்தில் 'ஓயசிஸ்' எனப்படும் பாலைவனச்சோலைகள் நீண்ட இடைவெளிகளுக்குப் பிறகு அங்கங்கே இருப்பதால், அந்த இடத்திற்குச் சென்று உணவும், தண்ணீரும் கிடைக்கும்வரை ஒட்டகம் தனக்குத் தேவையான உணவையும் தண்ணீரையும் எடுத்துச்செல்ல வேண்டியிருக்கிறது.

வள்ளுவர் நகரில்

(சோழன்)

மாநாட்டின் மூன்றுவது நாள் இரவு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் "அட்வ கேட் அமரன்" நாடகம் இருந்தது. மாநாட்டுச் சொற்பொழிவுகள் முடிந்ததும், கூட்டத்தின் பெரும்பகுதி; திறந்த வெளி அரங்கில் குழுமிவிட்டது.

"தமிழ் ஐயா" வாங்கி வைத்திருந்த கட்டிச் சோற்றை உடைத்து, தண்ணீருடன் கலந்து உள் தள்ளிவிட்டு, நாடக அரங்குக்கு நாங்கள் வந்தோம். தாங்கமுடியாத கூட்டம். மேடை தொலைவில் இருக்கிறது. மேடையை நோக்கிக் கூட்டம் நெருக்கமாக பார்க்கத் தொடங்கியதும்—திறந்த வெளி அரங்கில் நாடகம் பார்க்க வந்தவர்கள் சாதாரணமாக நாடகக் கொட்டகையில் முதல் வகுப்பில் உட்கார்ந்து பார்க்கும் வசதியுடன் பார்க்கமுடியும் என்று நினைத்தார்களோ என்னவோ மேடையை நோக்கி கூட்டத்தின் நெருக்கம் இருந்தது, அதனுல்—அலைமோதி வருவது போல கூட்டம் நெருக்கி வந்து, மேடைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் மேடை மீது போய்விட்டனர். பின் மாநாட்டுச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கூட்டத்தை அமைதிப்படுத்தி வைத்தார்கள்.

"இப்படி அவதிப்படுவதைவிட, ஒரு நல்ல இடம் சொல்லுகிறேன், வருகிறீர்களா?" என்று தமிழ் ஐயா நகர்ந்தார்.

இவ்வளவு நெருக்கடியில் நல்ல இடத்தை எப்படிக் கண்டுபிடித்தார் என்று "எந்த இடம்?" என்று ஆவலுடன் நாங்கள் கேட்டோம்.

"வெளியில் போய்விடலாம்."

கூட்டம் வரவர அதிகமாகிக்கொண்டேயிருந்தது. அமைதியாக வெளியில்போய் விடுவதே நலமென்று தோன்றியது. எவ்வளவு சிரமத்துடன் உள்ளே போகவேண்டியிருந்ததோ, அவ்வளவு சிரமத்துடன் வெளியில் வந்தோம்.

வள்ளுவர் நகரின் இரவுத்தோற்றம் அழகாக இருந்தது. விளக்கு வரிசைகளும், வண்ணவிளக்குகளும், தூரத்துக்குச் செல்லச் செல்ல அதிகமாக எடுத்துக்காட்டின. ஒளியமைப்பைப் பார்க்கவேண்டுமென்பதற்காகச் சிறிது தூரம் நடந்து சென்றோம். அப்பொழுது எடுக்கப்பட்ட படம்தான் இறுதியில் போடப்பட்டிருப்பதாகும். மிக தூரத்தில் வைத்து எடுக்கப்பட்டபோதிலும், படத்தில் இரண்டு ஓரங்களும் விடப்பட்டன. பின்பு மீண்டும் வள்ளுவர் நகர் நோக்கி, நாங்கள் நடந்து வந்தோம். வழியிலும், மாநாட்டுப் பந்தலுக்குச் செல்லும் எதிர்பாதைகளை அடுத்தும் கடைகள் ஏராளமாக இருந்தன. மாநாட்டுக்காக, அவ்வளவு கடைகளும் அங்கு வந்திருந்தன. கடைகளின் தொகுதிகளில், ஒரு துணிக்கடை (ஜவுளிக்கடை) கூட இருந்த தென்றல் பார்த்துக் கொள்ளுங்களேன்! நாலைந்து நாட்கள் சேர்ந்தாற்போல் தங்குகிறவர்களுக்கு என்னென்ன தேவையான சாமான்கள் தேவைப்படுமோ அவையனைத்தும் வள்ளுவர் நகரைச்சார்ந்த கடைகளில் கிடைத்தன. இதையல்லாமல், வேடிக்கையான பொருள்கள் பல விற்கப்பட்டன.

சிகப்பு வண்ணம் பூசப்பட்ட கைத்தடி ஒன்றை வாங்கினேம். கைத்தடி என்றால், பிரம்பாலானதல்ல, மிட்டாயாலானது. அதை ஒடித்துப்பார்த்தால், உள் கருப்பு—சிவப்பு வண்ணங்கள் இருந்தன.

முழுவதும் சர்க்கரையாலானது. அதனுல் அதிகம் சாப்பிட முடியவில்லை. ஆதலால் நண்பர்கள் யாதும் எதிர்ப்பட்டால் போதும்! சிறிது நேரம் அந்த மிட்டாய்த்தடியைப் பற்றி விளக்கிவிட்டு கொஞ்சம் ஒடித்துக் கொடுத்தும் வந்தோம். இதனுல், "மிட்டாய்த்" தடியின் பாரம் குறைந்தது.

மிட்டாய் வாங்கிச் சுவைபார்த்த நண்பர் ஒருவர் சொன்னர், "இந்த மாதிரி மிட்டாய் பிரம்பு நமது வாத்தியார்களிடம் இருந்தால், எவ்வளவு நன்றாகயிருந்திருக்கும். ஒரு அடி விழுந்ததும், அரையடி மிட்டாயும் கீழே விழும்!"

"சிலர் யோசித்துக்கொண்டே, பென்சிலின் மேல்பகுதியைக் கடித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு மிட்டாய்ப் பென்சில் கொடுத்தால், நல்லது."

"எழுத்துக்கூட இனிமையாக இருக்கும்."

மாநாட்டுப் பந்தலிலிருந்து ஏராளமான மக்கள் வந்துகொண்டிருந்தார்கள். கடைகளைச் சூழ்ந்தும், வழியெங்கும் மக்கள் நடமாட்டம் இருந்தபடி இருந்தது. அவ்வளவு மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்பொழுது, நாடகம் முடிந்து திரும்புகிருர்கள் போலிருந்தது. ஆனல் அவ்வளவு மக்களும் திறந்த வெளியரங்கில் இடமில்லாமல் வெளிவந்தவர்கள். மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தால், பந்தல் நிறைந்த அளவு மக்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அதைத் தாண்டி திறந்த வெளி அரங்குக்கு வந்தால், அதுவும் நிறைந்திருந்தது. ஆக மூன்றிடங்களிலும், மாநாட்டுக்கு வெளியிலும், மாநாட்டுப்பந்தலிலும், பந்தலைத்தாண்டியுள்ள திறந்த வெளி அரங்கிலும் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

நாடகத்தை வெகுதூரத்தில் உட்கார்ந்தபடி சிறிதுநேரம் பார்த்தோம். அந்த இடத்தில் மேடையையும், அதில் நடிப்பவர்களையும் பார்த்தால், பொம்மலாட்டம் பார்ப்பதுபோலிருந்தது. உருவங்கள் சிறிதாகவும், தூரத்திலும் குரல் பலமாகவும் பக்கத்திலும் வந்தன. ஒலிபெருக்கி ஏற்பாடு விரிவாகச் செய்யப்பட்டிருந்ததால், கூடியிருந்த மக்களனைவரும் நாடகத்தைப்பார்க்க முடியாவிட்டாலும், கேட்கும்படியான வாய்ப்பைப் பெற்ருர்கள்.

மாநில மாட்டின் நான்காம் நாள் காலை, கூட்டம் இன்னும் அதிகமானபடி இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாள். ஆதலால் மற்ற மூன்று நாட்களிலும் இருந்த கூட்டத்தைவிடத் திரண்ட கூட்டம் நான்காம் நாள்—அது மாநாட்டின் கடைசிநாளுங்கூட... இருந்தது.

காலை நிகழ்ச்சிக்கு மாநாட்டின் உள் நுழையும் பொழுது, வாயில்களில் வாக்குச்சீட்டுகள் தரப்பட்டன. தேர்தல்கள் வேண்டுமா? வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க, பொது ஓட்டுமுறை வைக்கப்பட்டிருந்தது. தேர்தலில் பலர் நிற்பது வழக்கம். மாநில மாநாட்டில், தேர்தலே தேர்தலில் நின்றது. சனிக்கிழமைகளில் வாக்கெடுப்பு நடத்துவதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் வெள்ளிக்கிழமை மழையால் நிகழ்ச்சிகள் தடைப்பட்டு, மாநாட்டுத் தலைவர் உரை—சனிக்கிழமை நடைபெற்றதால், வாக்கெடுப்பு ஞாயிற்றுக்கிழமைத் தள்ளிவைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைக் காலை உள்நுழைந்த பொழுது, வாக்குச் சீட்டுகள் தரப்பட்டன.

மாநாட்டுப் பந்தலுக்குள் நாங்கள் வரும் பொழுது தோழர் குபேர் என்பவர் மலையாளத்தில் பேசிக்கொண்டிருந்தார். குபேர் என்றதும், புதுச்சேரியைச் சேர்ந்த அரசியல் வாதி—தற்போது காங்கிரஸ் ஆதரவுடன் பதவியிலிருக்கும் குபேர் என்று நினைத்து விடாதீர்கள். இந்தத் தோழர் மலையாளப் பகுதியைச் சேர்ந்தவர், திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை ஏற்று, அதனிடம் ஈடுபாடு கொண்டு, மாநாட்டுக்கு வந்திருந்தார். அவர் கொண்டிருந்த உணர்ச்சியும், ஆர்வமும் அவருடைய பேச்சில் வெளிப்பட்டன. அவர் பேசியது மலையாளத்தில் என்றபோதிலும், கூடியிருந்தவர்கள் பேச்சைப் புரிந்துகொண்டனர். முக்கியமான கட்டங்களில் கைதட்டி, தங்களுடைய ஆதரவை அளித்தனர். வடநாட்டு மார்வாரி—குஜராத்திகள் நடத்திடும் சுரண்டலாட்சியின் கொடுமையை, அந்த மலையாளத் தோழர் மிகுந்த ஆவேசத்துடன் எடுத்துரைத்தார். நமது கழகத்தோழர்கள் தமிழில் எவ்வாறு தெள்ளத்தெளிய கவர்ச்சிகரமாகப் பேசுகிருர்களோ, அதேவிதத் தெளிவுடனும் கவர்ச்சியுடனும் மலையாளத்தோழரின் பேச்சு இருந்தது. கழகத்தைச் சார்ந்தவர்கள், உணர்ச்சியுடனும் கவர்ச்சிகரமாகவும் பேசுகிருர்களென்ருல் அது தனிப்பட்டவர்களின் திறமையை மட்டும் பொறுத்ததல்ல. முக்கியமான காரணம், பேசப்படும் கருத்துக்கள் உணர்ச்சியுடையதாய், உயிருள்ளதாய், கவர்ச்சியுடையதாய் இருக்கின்றன. ஆதலால் பேசும்பொழுது அவை சிறந்து வருகின்றன. கழகக் கருத்துக்களைத் தமிழில் மட்டுமல்ல, மலையாள மொழியில் தரப்படும் பொழுதும், மொழி மாறினலும் மாண்பு மாறிடாத வகையில் பேச்சு இருந்தது.

மலையாளத் தோழர் பேசுவதற்கு முன்பு பங்களூரைச் சேர்ந்த தோழர் வி. வி. பதி கன்னடத்திலும், ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த தோழர் பார்த்தசாரதி என்பவர் தெலுங்கு மொழியிலும், கழகத்தின் இலட்சியத்தை விளக்கிப் பேசினதாகவும், ஓரோரிடம் தனிச்சொற்கள் விளங்காதனவாக இருந்த போதிலும், பேச்சும் கருத்தும் நன்குப் புரிந்ததாகவும், இடையிடையே கையொலிகள் எழுந்து பாராட்டப்பட்டதாகவும் எங்களுக்குப் பக்கத்திலிருந்தவர்கள் கூறினர்கள்.

சிறப்புச் சொற்பொழிவுகள் ஆரம்பமாயின. "தீச்சுடர்" ஆசிரியர் சி. பி. சிற்றரசு "கலையில் கருத்துப் புரட்சி" என்ற தம் பேச்சைத் துவக்கினார். கருத்துக்களில் புரட்சி வேகம் தலைதூக்குகிறதென்றால், அது அரசியலுடன் நிற்பதில்லை. வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளிலும், இயல்களிலும் பரிமளிக்கும். நாட்டில் ஏற்பட்டுள்ள கருத்துப்புரட்சி கலையுலகில் பிரதிபலிப்பதை தோழர் சிற்றரசு விளக்கிக் காட்டி, கலையுலகில் மூளும் புரட்சி பற்றியும் குறிப்பிட்டார்.

சிறுவர்களுக்கான கல்வி முறை எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி திரு. இராசையா அவர்கள் பேசினார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றிற்குத் தலைமை தாங்குபவரான அவர், கல்வித்துறையின் நுணுக்கங்களையும், அதில் ஏற்படும் திடீர் மாறுதல்கள் கல்வி கற்போருக்கு விளைவிக்கப் படும் தீங்குகளையும் நன்கு அறிந்திருக்கிறார். நாட்டிற்குத் தேவையான கல்விமுறை பற்றித் தம் ஆராய்ச்சியையும் அனுபவத்தையும் அடிப்படையாக வைத்துத் திரு. இராசையா அவர்கள் அறிவுரை வழங்கினார். கல்வித் துறைக்குச் சிறிதும் தொடர்பு அற்றவர்கள், கல்வித்துறையில் மகத்தான மாறுதல்களைச் செய்ய விரும்புமுன்—ஏனென்றால் மற்றத் துறைகளில் அவர்களால் ஏதும் செய்யமுடிவதில்லை—திரு. இராசையா போன்று, கல்வித் துறையில் அனுபவமும் தெளிவும் பெற்றவர்களின் ஆலோசனைகளை மேற்கொண்டால், நாட்டுக்கும் அவர்களுக்கும் நல்லதாகும்.

திராவிடம் தனித்து வாழமுடியுமா? என்ற கேள்வி, திராவிடநாட்டுக் கொள்கைக்காணப்பட்ட நாளிலிருந்து கேட்கப்படுவதாகும்; கேள்விக்குப் பதில்தரும் முறையில் வரலாற்று ஆதாரங்களும், பொருளாதாரப் புள்ளி விவரங்களும் ஏராளமாகத் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதியாக, "தனிநாடும் பொருளாதார வசதிகளும்" என்ற தலைப்பின்கீழ் தோழர் என். எஸ். இளங்கோ பேசினார்.

"புத்தர் நெறி" பற்றி தோழர் ஆசைத்தம்பி பேசும்பொழுது, நாம் பகுத்தறிவு இயக்கத்தின் மூலம் பரப்பிய பல கருத்துக்கள் புத்தர் தந்த பொன்மொழிகளுடன் ஒத்திருப்பதைச் சுட்டிக்காட்டி, புத்தர் தந்த அடிப்படைக் கருத்துக்களுக்கு அவரைக்கொண்டாட முன்வருபவர்கள் மாறுபட்டவர்களாக இருப்பதை எடுத்துக்காட்டினார். நாம் சொன்னதும் பலருக்கு மலைப்பையும் சிலருக்கு மன வெறுப்பையும் தருவனவாக உள்ள பல கருத்துக்களை எடுத்துச்சொல்லி, "அதைத் தான் புத்தரும் சொன்னார்," என்று புத்தரின் வாக்குகளிலிருந்து மேற்கோள் காட்டி, புத்தர் எவ்வாறு சிறந்த ஆராய்ச்சியாளராக, பகுத்தறிவுவாதியாக இருந்தார் என்பதை தோழர் ஆசைத்தம்பி விளக்கிக் காட்டினார். உயர்ந்த கருத்துக்களடங்கிய பொருள்பற்றி, எளிய நடையில் தோழர் ஆசைத்தம்பி தம் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

அடுத்து "உலக அமைதி" குறித்துத் தோழர் ப. உ, சண்முகம் பேசினார். வெறுப்பும், போட்டியும் நிறைந்த சூழ்நிலையில் [illegible] போர்கள் மூளும் விதமும், ஒருபோர் மற்றொரு போருக்கு விதையிடும் பான்மை பற்றியும், வரலாற்றில் நிகழ்ந்த போர்கள் பற்றியும், போர்களின் வரலாறுபற்றியும், ஆராய்ச்சிப் பண்பு மிகுந்த நிலையில் தோழர் சண்முகம் அவர்களின் பேச்சு இருந்தது. போரிடும் உலகில் அமைதி காணுவதற்கான வழிகளை அவர் ஆராய்ந்தார். அவருடைய பேச்சு மாநாட்டில் ஆர்வத்துடனும், மிகக் குறிப்பாகவும் கேட்கப்பட்டது. சிறந்த பேச்சைச் செவிமடுக்கும்பொழுது ஏற்படும் அமைதியும், ஆரவாரமும் அவர் பேச்சுக்குக்கிடைத்தது.

"மறைந்த மாவீரர்கள்" குறித்து தோழர் நா. வி. நடராசன் அவர்கள்—என். வி. நடராசன் என்பவர்தாம் நா. வி. நடராசன் அவர்களும்—பேசினார்கள். அரசாங்கக் கொடுமைகளுக்கு இயக்கம் ஆளாகி, தாளமுத்து நடராசர்கள் பிணமாக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதுதான், தோழர் நடராசன் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் முகாமை விட்டு வெளியேறி, அவதியுறும் கூட்டத்துடன் நாட்டின் அவல நிலைபோக்கப பாடுபட ஆரம்பித்தார். மறைந்த மாவீரர்கள்—மறையாத அவர் தம் இலட்சியங்கள் பற்றி தோழர் நடராசன் பேசினார்.

காலை நிகழ்ச்சியின் இறுதியாக — அப்பொழுது மணி 12க்கு மேலாகிவிட்டது— தோழர் சம்பத் அவர்கள் "இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்" பற்றி பேச ஆரம்பித்தார். நேரு சர்க்காரின் ஆட்சியில் ஏற்பட்டுள்ள திடீர் மாறுதல்கள்—கொள்கை மாற்றங்கள், 1946லிருந்த நேரு பண்டிதருக்கும் 1956லிருக்கும் நேரு பண்டிதருக்கும் உள்ள விரோதங்கள், அவருக்கு நேர்ந்துள்ள கொள்கைக் குழப்பங்கள் இவைகளைப்பற்றி, சம்பத் விளக்கமாக எடுத்துக் காட்டினார். காஷ்மீரைப்பற்றி ஆந்திராபிரிவினைபற்றி, பம்பாய் கிளர்ச்சிபற்றி, காங்கிரஸ் தீர்மானங்கள்

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?



"கொள்கை குழப்பத்தை" விளக்க ஆயத்தமாகும் சொற்செல்வர் சம்பத்.

பற்றி ஒன்றிலிருந்து மற்றென்றுக்குப்போகும் பொழுது நேரு பண்டிதருக்கு ஏற்படும் கொள்கை முரண்பாடுகள் அவரது பேச்சிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்களைக் காட்டி, சம்பத் காங்கிரசின் கொள்கைக்குழப்பத்தை விளக்கினார். அடுத்ததாக கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டத்தில், யதார்த்த நடைமுறையில் ஏற்படும் திடீர் மாறுதல்கள், ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகளாக மட்டுமல்ல ஒன்றையொன்று மறுப்பனவாக இருக்கும் கொள்கை மாற்றங்கள் இவைகளை—தானாக அல்ல, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைபீடத்தின் வேதவாக்குகளைத் தாங்கி வருவதாகக் கருதப்பட்ட ஏடுகளைப் புரட்டி, அவைகளில் உள்ள வாக்கியங்களை அப்படியேபடித்துக் காட்டினார். கொள்கைக் குழப்பத்துக்குப் பெயர் பெற்ற கட்சி என்பதை அந்த மேற்கோள்கள் நிரூபித்தன. அன்றைய காலை வந்த செய்தித்தாள்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை—தி. மு. கவிற்கு இட்ட கட்டளை இருந்தது. அது பாலக்காடு தீர்மானம் பற்றி எழுந்ததாம். அதுவும் மிக அவசரமாக, திருச்சி மாநாட்டுக் கடைசிநாளன்று வெளியிடப்பட்டது. பெரிய தொரு மாநாடு நடைபெறுகிறது, தங்களுடைய (கண்) ஓட்டத்தில் ஏதாவது சொல்ல வேண்டாமா? அதனால் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அறிக்கை விடுத்திருந்தது. சிறிய கோலை எடுத்து வீசினார்கள், பெரிய சம்மட்டி அடி தாக்கியது.

தோழர் சம்பத்தின் சிறப்புச் சொற்பொழிவு இரண்டு மணிவரை நீடித்தது. ஆனால் அப்பொழுதும் அவர் எடுத்த பொருளை முழுவதும் முடித்ததாக அவருக்குத் தோன்றவில்லை என்று தெரிந்தது. தாம் கொண்டு வந்த பல குறிப்புகளை அவர் தொடாமல் வைத்துவிட்டார். சில பத்திரிக்கை வால்யூம்களில் இடையிடையே குறிப்பு வைத்து மேசைமீது வைத்திருந்தார். அவற்றை அவர் எடுத்துச்சொல்ல நேரமில்லை. கம்யூனிஸ்ட் கட்சி பற்றி அவர் நிகழ்த்திய முக்கால் மணிநேரப் பேச்சுக்கே, ஜனசக்தியில் ஐந்தாம் பக்கத்தில் ஆசிரியர், பன்னிரண்டாம் பக்கத்தில் ஜீவா என்று கட்டுரை எண் 4. 5 என்று இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. முழுக்குறிப்புகளையும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதனுடன் தொடர்பு கொண் [illegible] மற்று நாட்டு கட்சி [illegible] களுக்கும் ஏற்பட்ட கொள்கைக் குழப்பங்களைப் பற்றிய விவரங்களையும் தந்திருந்தால், 'ஜனசக்தி' முழுவதும் அவர்களுக்குப் போதாமலிருந்திருக்கும். இப்பொழுது நமது கழக ஏடுகள் மாநில மாநாட்டுக்குச் செலவழித்ததைவிட அதிகமான பக்கங்கள் "ஜனசக்தியில்" நமக்குக் கிடைத்திருக்கின்றன. 'கொள்கைக் குழப்பம்' என்று சம்பத் சொல்லியதற்குப் பதில்தரும் முறையில் அவர்கள் தீட்டும் நீண்ட விளக்கங்களில் குழப்பம் இருக்கிறது. ஒரு வாரத்தில் வருவதை மறுப்பதுபோன்று மற்றொரு வாரத்தில் வருகிறது! குழப்பத்தை விளக்கும் பொழுது மற்றொரு குழப்பம்!

தோழர் சம்பத் அவர்களின் பேச்சு முடிந்ததும், மாநாடு இடைவேளைக்குக் கலைந்தது. மாநாட்டின் பார்வையாளர்கள் உணவுக்குக் கலைந்து சென்றார்கள். ஆனால் பிரதிநிதிகள் கூட்டம் 2-30 மணிக்கு இருந்ததால், அவர்கள் மேடையருகே இருந்த தனிப்பந்தலில் கூடினார்கள். உணவுக்குச் செல்லாமல்! செயற்குழுவிலும் பொதுக்குழுவிலும் வைக்கப்பட்ட தீர்மானங்கள் பிரதிநிதிகள் கூட்டத்தில் வைக்கப்பட்டன. முக்கியமான தீர்மானங்கள் மட்டும் விவாதத்துக்கு வந்தன. சில திருத்தங்களுடன் அவை நிறைவேற்றப்பட்டு, மாநாட்டில் வைக்கும் நிலை அடைந்தன.

பிரதிநிதிகள் கூட்டம் முடிந்ததும், பிற்பகல் மாநாடு ஆரம்பமானது. தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. தீர்மானங்கள் பல இருந்ததால், முன் மொழிபவர்களும் வழி மொழிபவர்களும் தங்கள் பேச்சுக்களை மிகவும் சுருக்கிக்கொண்டார்கள். மொத்தம் 33 தீர்மானங்கள். 4 அல்லது 5 தீர்மானங்கள் மட்டும் தலைவரால் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் வேகமாகப் படிக்

கும்பொழுது, எனக்குப் பக்கத்திலிருந்த பத்திரிக்கை நிருபர்கள் மிகவும் வேகமாக எழுதிக்கொண்டார்கள். சுருக்கெழுத்துத் தெரிந்தவர்கள் சுலபமாக எழுதினார்கள். சுருக்கெழுத்துத்தெரியாதவர்கள்—எனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த "நம்நாடு" நிருபருக்குக்கூடச் சுருக்கெழுத்துத் தெரியாது — இருந்தாலும், வார்த்தைகளை விட்டும், முடிக்காமலும் அக்கம்பக்கத்திலிருந்தவர்களை அடிக்கடி கேட்டும் எழுதிக்கொண்டார்கள். "நம்நாடு" நிருபர் மிக அவசரமாக எழுதி எடுத்த தீர்மானங்களை மறுநாள் சென்னை வந்ததும் பத்திரிக்கையில் போட்டுவிட்டார். பெரும்பாலும் சரியாக இருந்தபோதிலும், ஓரிரு இடங்களில் வாக்கியங்கள் மாறியும், பிறழ்ந்தும் வந்திருக்கின்றன. வழி மொழிந்தவர்கள் பெயர் தொடர்ச்சியாக வரவில்லை. மாநாடுகளில் குறிப்பெடுக்க வருகிறவர்கள், சுருக்கெழுத்துத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சிறிதும் தவறில்லாமல் பேசுவதை எடுக்கமுடியும். நல்லவேளை எனக்குச் சுருக்கெழுத்துத் தெரியாது, பேச்சுக்களைக் குறிப்பெடுக்கவும் நான் முயலவில்லை.

தீர்மானங்கள் முடிவுற்றதும், தேர்தலில் போட்டியிடுதல் வேண்டுமா, வேண்டாமா என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட ஓட்டு விவரங்கள் வெளியிடப்பட்டன. வேண்டும் என்பதற்கு ஓட்டுகளும், வேண்டாம் என்பதற்கு ஓட்டுகளும் கிடைத்தன. "திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது" என்று தலைவர் சொன்னதும், அதை வரவேற்கும் அறிகுறியாக, பேரொலி மாநாட்டில் கிளம்பியது.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், கடைசியாக அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். நான்கு நாட்களிலும், முதல் நாள் மூவலூர் மூதாட்டியாரைப் பாராட்டிப் பேசியதற்குப் பின், தலைவரை வழிமொழியும் முகத்தான் நான்கு வார்த்தைகள் மொழிந்ததல்லாமல், நீண்ட சொற்பொழிவாற்றவில்லை.

அதனால் அண்ணாவின் அறிவுரையைக் கேட்க மக்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். மாநாட்டின் பந்தலிலும் அதையடுத்திருந்த வெளிப்பகுதியிலும் கூட்டம் சிறிது கூட இடம் விடாமல் நிறைந்துவிட்டது.

அண்ணா அவர்கள் தமக்கே உரித்தான பெருமிதத்தோடும், தெள்ளிய உயர்வோடும் கழகவளர்ச்சிபற்றியும், புலி வந்தாலும் பூனையாகிவிடும் வீரர் கோட்டம் அமைந்துள்ள விதம்பற்றியும் விளக்கினார். மாநாட்டின் பொலிவும், குதூகலமும் அண்ணாவைப் பூரிப்படையச் செய்தன. தமது பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்: "எனக்குப் பின்னால் இந்தக் காரியத்தைச் செய்ய யார் இருக்கிறார்கள் என்று பெரியார் அடிக்கடி கூறுவார், ஆனால் எனக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்? என்று கேட்காமலிருப்பதுகூட அல்ல, நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே என்னுடைய தம்பிமார்கள் எல்லாக் காரியங்களையும் கவனிப்பார்கள் என்று நான் பெருமையுடன் எடுத்துச் சொல்ல முடியும்"

ஒரு அரசியல் தலைவன் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவனாக இருந்தால், மற்றவர்களிடம் நம்பிக்கை உண்டாகிறது; தனிப்பட்டவர்களைப் பொறுத்தல்லாமல் மக்களியக்கம் வளரும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. ஜனநாயகப் பண்பில் மக்களியக்கம் வளருகிறது, அந்தவகையில், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர் என்பது மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் சிறந்த ஜனநாயகவாதியாகவும் விளங்கும் அண்ணா ஜனநாயக முறையில் கழகத்தை வளர்த்தார், கழகம் வளர்ந்தது. அதன் வளர்ச்சியின் அளவு, அவர் கண்முன், மாநிலமாநாட்டில் காட்சியளித்தது.

தேர்தலைப்பற்றி அண்ணா அவர்கள் விளக்கினார்கள். மூன்று முறைகளை - வேட்டுமுறை, ஓட்டுமுறை, ஒட்டுமுறை என்று அரசியல் வலிபெற மூன்று முறைகளே உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்கள். மாநாட்டில் பெருந்திரளான அளவில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று முடிவு எடுத்த போதிலும், நம்மவர்களில் சிலருக்கு "நம்மால் தேர்தலில் போட்டியிட முடியுமா?" என்று சிறிது யோசனை பிறந்திருக்கும். மாற்றாரில் பலருக்கு, ஆளுங் கனதனவான்கள் எல்லோருக்குமே, காமராசருக்கும் அவரைச் சார்ந்த பணமூட்டைகளுக்கும், "இவர்களால் முடியுமா? தேர்தலில் ஈடுபடப் பணமுண்டா? வசதியுண்டா, ஆளம்பு உண்டா?" என்று வெளியில்—உள்ளுக்குள் அச்சமென்றாலும்—சொல்லிக் கொள்வார்கள். அண்ணா அவர்கள் கூடியிருந்த தம்பிமார்களைப் பார்த்து—கழகத்தின் கண்மணிகளைப் பார்த்து "நம்மாலே முடியுமா?" என்று சிலர் தோழர்கள் கேட்கலாம். உன்னாலா முடியாது; தம்பி! உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்? நீ இதைக்கூடச் செய்யாவிட்டால், வேறு எதைத்தான் செய்யப் போகிறாய்? இதிலேகூட நமது பலத்தைக் காட்ட முடியவில்லையென்றால், வேறு

மாநாட்டின் இறுதிப் பேச்சில் அறிஞர் அண்ணா.

எதிலே நாம் காட்ட முடியும்?" என்று கேட்டார். தம்பிமார்கள் கரங்கள் அசைந்தன பதில்தரும் முறையில், கொட்டகை அதிர்ந்தது, எழுந்த பேரொலியால்!

நாட்டின் வளம்பற்றியும், அது நமதாக வேண்டிய அவசியம்பற்றியும் அவர் விரித்துரைத்தார். "திருவோட்டை இழந்துவிட்ட பண்டாரம்கூட, இழந்துவிட்ட திருவோட்டைத் தேடித்தேடித் திரிவதைப்பார்க்கிறோம், பண்டாரத்திற்குத் திருவோடு எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியமல்லவா ஒரு மனிதனுக்கு ஒரு நாடு என்பது? நாடு என்று சொன்னால், காமராசர் சொல்கிறார். 'அது எக்கேடு கெட்டால் என்ன ?' என்று.

நாடுவிடுதலை யடைவதற்கான பக்குவத்தை அடைந்துள்ளதற்கான அறிகுறிகளைக் காட்டி

"நாட்டில் உள்ள கவிவாணர்கள், கலைவாணர்கள், ஓவியர்கள், காவியந் தீட்டுவோர், கர்மவீரர்கள், அத்தனை பேருடைய உள்ளத்திலும் விடுதலை உணர்வு என்று எழும்புகிறதோ அன்று அந்த நாடு விடுதலை பெறுகிறது என்று பொருள். எழுச்சி மிக்க கவிதைகள் அளிக்கும் பாரதிதாசன்களை நாம் பெற்றிருக்கின்றோம்! எண்ணத்திற்கு வண்ணம்தரும் புலவர் பெருமக்களைப் பெற்றிருக்கின்றோம்! வண்ணமுள்ள எண்ணத்தை வளமான காட்சியாக்கிக் காட்டும் கலைவாணர்களை நாம் பெற்றிருக்கின்றோம். இவர்கள் அனைவரும் நம்மிடமிருக்கும்போது நமக்கென்ன குறை.

அண்ணாவின் பேச்சு முடிந்தது, மாநில மாநாட்டின் காட்சி உச்சநிலை அடைந்தது.

அரிமா நோக்கு—அழகு ஓவியம் கண்ணைக் கவர்ந்தது, நாட்டினரின் கருத்தைக் கவர்ந்தது.

அன்று இரவு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் "சுமை தாங்கி" நாடகம் நடைபெற்றது. நாடகத்தை முழுவதும் பார்க்க முடியவில்லை. இடையில் காஞ்சித் தோழர் சி. வி. இராசகோபால் அவர்கள் அழைத்தார்கள். அவருடைய நண்பர் எத்திராசு அவர்களின் காரில் என்னை ஏற்றிக்கொண்டார்கள்.

போகும்பொழுது வள்ளுவர் நகரைப் பார்த்தவண்ணமிருந்தேன். வர, வர, பந்தல், வளைவுகள் நிழல்களாக அமிழ்ந்தன. வள்ளுவர் நகரிலிருந்து ஒளிமட்டும் வீசிக்கொண்டிருந்தது. இருளில் ஒளி—துன்புற்ற நாட்டில் மகிழ்ச்சி காணும் மக்களியக்கத்தின் மாநாடு!



மலர்க்காடு

" கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி "

ஆடும் மாடும்

[ஆசிரியர்: டி. கே. சீனிவாசன். பக். 236 விலை ரூ. 2—8—0 கிடைக்குமிடம்: அறிவுநூல் நிலையம், 405, பெரியகடை வீதி, திருச்சிராப்பள்ளி.]

இது தோழர், டி. கே. சீனிவாசன் அவர்களது சிந்தனையிலே மலர்ந்த அழகிய ஒரு கற்பனைக் கதை. நம நாட்டுச் சமுதாய வாழ்வில் காணப்படும் கறைகளையும், குறைகளையும், வளைவுகளையும், நெளிவுகளையும் சுட்டிக்காட்டி, அவைகளைக் களையும் வழிவகைகளை வகுத்துக் காட்டிடும் முறையில் ஆசிரியர் கதையின் நிகழ்ச்சிகளைப் பின்னியுள்ளார். "வாழ்க்கை என்பது கலையா? கவிதையா? அல்லது வெறும் வரவுசெலவுக் கணக்கு தானா? என்பனபோன்ற வினாக்களைக் கதையில் எழுப்பவைத்துக், "கலையுமல்ல—கவிதையுமல்ல; வாழ்க்கை ஒரு சாதனம். அதனை இயக்குபவர்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது, அது கலையாவதும் கவிதையாவதும்" என்பனபோன்ற விடைகளைக் கூறவைத்துக் கருத்துக்களைத் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர். பெண்ணும் ஆணும் எப்படி ஆடும்மாடும் போலாவார்கள் என்ற விளக்கம் தெளிவாகக் கதையில் தரப்படுகிறது. படிப்போர் உள்ளத்திற்குக் கிளர்ச்சியையும், கவர்ச்சியையும் தரும் வகையில் புரட்சி எழுத்தாளர் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் இக்கதையை எழுதியுள்ளார்.

* * *

உரிமை வாழ்வு

[ஆசிரியர்: க. அன்பழகன் எம்.ஏ. பக்: 120. விலை ரூ. 1—8—0 கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.]

தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அரசியல் குறிக்கோளையும், விடுதலை இலட்சியத்தையும் விளக்கும் வகையில் அவ்வப்போது எழுதிய பத்துக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். விடுதலை வேட்கையுணர்வைப் படிப்போர் உள்ளத்தில் தூண்டிவிடும் விதத்தில் அழகிய இனிய மிடுக்கான தமிழ் நடையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. நூலின் அட்டை அன்பழகன் அவர்களின் உருவப்படத்தைத் தாங்கிக் கவர்ச்சிகரமாக விளங்குகிறது. நல்ல தாளில் அழகான முறையில் இந்நூலைப் புது வாழ்வுப் பதிப்பகத்தார் அச்சியற்றியுள்ளார்கள்.

* * *

பூக்குடலை

[ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன் பக்: 160. விலை: ரூ. 2—0—0. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.]

சிறந்த கதையாசிரியராகிய தோழர் கே. ஜி. இராதாமணாளன் அவர்கள் அவ்வப்போது பல்வேறு இதழ்களில் எழுதிய பல கதைகளின் தொகுப்பே இந்நூல். ஒரு பூக்குடலையில் பல வண்ண மலர்கள் இருப்பதைப் போல, இந்தத் தொகுப்பிலும் பல்வேறு இனிய அழகிய சுவையுள்ள சிறுகதைகள் காணப்படுகின்றன. தின்னத்தின்னத் தெவிட்டாத் தீங்கரும்புபோல் தோழர் இராதாமணாளன் அவர்களின் கதைகள் சுவை பயப்பனவாகும் என்பதைப் பலரும் அறிவார்கள். அவர் " பூக்குடலை " என்ற கதம்ப மாலையைத் தருகிறார். தமிழ் மக்கள் இதனை நுகர்ந்து மகிழ்வார்களாக!

* * *

தையற்கலை: சிறுவர் உடைகள்

[ஆசிரியர்: கே. பி. சுந்தரம் G.C.T. பக்: 192. விலை: ரூ. 3—0—0. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை - 1.]

தையற்கலை வல்லுநர் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் தமது மூன்றாவது நூலாக இதனைத் தமிழகத்துக்கு அளித்துள்ளார்கள். இதற்கு முன்னால் 'தையற்கலை - பெண்கள் உடைகள், 'தையற்கலை - ஆண்கள் உடைகள்' என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டுப் பலரின் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் பெற்றார். விதவிதமாகவும், வேடிக்கையாகவும், விரைவாகவும் பெருகிக்கொண்டிருக்கும் குழந்தைகளின் உடைகளை, வீட்டிலுள்ள பெண்கள், தம் விருப்பம்போல் தைத்துக் கொள்வதற்கு இந்நூல் பெருந்துணை புரிவதாகும். தையற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்க்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் என்பது திண்ணம். நூல் நல்ல தாளில், அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது.

வினாவும் விளக்கமும்

வினா: பல்லாயிரம் ஆண்டுகளாக மிகமிகப் பெரும்பான்மை மக்களாலும் அறிஞர்களாலும் உண்டு என்று நம்பப்பெற்று வருவதைத் தாங்கள் இல்லை என்கிறீர்களே, தாங்கள் அல்லாத மற்ற யாவரும் முட்டாள்களா? "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வைத்து, அலகையா வைக்கப் படும்" என்ற திருக்குறளைச் சிந்தித்துப் பார்ப்பீர்களா?

[இது அருள்நெறித்திருக்கூட்டத்தாரின் 17வது வினா.]

விளக்கம்: பல்லாயிரம் ஆண்டுகளாக மிகமிகப் பெரும்பான்மை மக்களாலும் அறிஞர்களாலும் உண்டு என்று நம்பப்பட்டு வந்த பலப்பல, காலம் செல்லச்செல்ல, உண்மை புலப்படப்புலப்பட, அறிவு தெளிவாகத் தெளிவாக, கருத்து வளர வளர **அப்படியில்லை** என்ற முடிவுக்குப் பிற்காலப் பெரும்பான்மை மக்களும், அறிஞர்களும் வரவேண்டியவர்களாக இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். பெரும்பான்மையான மக்கள் சிலவற்றைப் பொறுத்து "அப்படியில்லை" என்ற முடிவுக்கு வருதற்கேற்ற அறிவாற்றல்திறன் அற்றவர்களாக இருந்தாலும், அறிஞர் பெருமக்கள் மட்டுமாவது அப்படிப்பட்ட முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுவதைப் பார்க்கிறோம். அறிஞர் பெருமக்கள் அனைவரும் கூட "அப்படியில்லை" என்ற முடிவுக்கு வருவதற்கேற்ற வாய்ப்பு ஏற்படாத நிலையில், அவர்களில் தூயஉள்ளம்படைத்த சீரியோர் சிலர் மட்டுமாவது அப்படிப்பட்ட முடிவுக்கு வந்து தீரவேண்டியநிலை ஏற்பட்டுவிடுவதை அறிகிறோம். இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவையல்ல; நடைமுறை உலகில் நடத்துவருவனவேயாகும். இதுகாரணம்பற்றிதான் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்ற இலக்கண விதி நெடுநாட்களாகச் செப்பப்பட்டு வருகின்றது.

பல்லாயிரம் ஆண்டுகளாக "உண்டு" என்று நம்பப்பட்டு வந்த அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும், "அப்படி இல்லை" என்று எந்த ஒன்றையும் எந்த ஒரு காலத்திலும், எவரும், எக்காரணம் பற்றியும் சொல்லுதல் கூடாது என்று யார்யாரேனும் கூறுவார்களேயானால் அத்தகையோர் தாம், தங்களைத் தாங்களாகவே முட்டாள்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முனைகிறார்கள் என்று பொருள்படுமேயல்லாது, நாமாக அவர்களை வற்புறுத்தி முட்டாள்கள் பட்டியலில் சேர்க்கிறோம் என்று பொருள்படாது. "உண்டு" என்று நாம் ஏற்றுக்கொள்வதற்குத் தக்க காரணகாரியவிளக்கங்கள் இருக்குமேயானால், அப்படிப்பட்டவற்றை நாம் ஏற்றுக்கொள்ளவே செய்கிறோம்; "அப்படியில்லை" என்பதற்குத் தக்க காரணகாரிய விளக்கங்கள் நமக்குத் தென்படுமேயானால், அப்படிப்பட்டவற்றை உண்மைக்குப் புறம்பானவை என்று நாம் ஒதுக்கிவைக்கவே செய்கிறோம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மிகமிகப் பெரும்பான்மை மக்களாலும், அறிஞர்களாலும் "உண்டு" என்று குருட்டுத்தனமாக நம்பப்பட்டு வந்த சிலவற்றை, நாம் "அப்படியில்லை" என்று கூறுகிறோம் என்றால், அவற்றிற்கான தக்க காரணகாரியவிளக்கங்காட்டிக் கூறுகிறோமே யல்லாமல், வேண்டுமென்றே மறுப்புரைகூறவேண்டும் என்பதற்காகக் கூறவில்லை.

கடவுளைப்பற்றி "உண்டு" என்று நம்பப்பட்டு வந்த சிலவற்றை "அப்படியில்லை" என்று நாம் சொல்லுகிறோம் என்றால், அவற்றிற்கான காரணகாரிய விளக்கங்களை எடுத்து வைத்துத்தான் சொல்லுகிறோம். இப்பொழுது "அப்படியில்லை" என்று தெளிவாக்கப்படும் சிலவற்றை, "உண்டு" என்று முன்னோர்கள் நம்பியிருந்தனர் என்பதற்காக அவர்கள் அனைவரையும் "முட்டாள்கள்" என்று கூறிட நாம் முற்பட்டோமில்லை; "அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்" என்றுதான் கூறுகிறோம். "அப்படியில்லை" என்பதற்கான தெளிவான காரணங்கள் காட்டிய பிறகும், "நாங்கள் ஆராய்ந்து பார்க்க மாட்டோம், 'உண்டு, என்று அப்படியே நம்பு

வோம்'' என்று கூறுவாருளரேயானல், அத் தகையோரை ஏதுமே அறியாத முட்டாள்கள் என்று நாம் கூறுவதில்லை; அவர்கள் அவ் வகையில் சிந்திக்க மறந்தவர்கள்-சிந்திக்க மறுப்பவர்கள் - குருட்டு நம்பிக்கையாளர்கள் என்றுதான் கூறுகிறேம்.

"தாங்கள் அல்லாத மற்றயாவரும் முட்டாள்களா ?" என்று பகுத்தறிவாளரைப் பார்த்து அருள் நெறிக் கூட்டத்தார் கேட்கின்றனர். அப்ப டிப்பட்ட ஆணவப்போக்கு, பகுத்தறிவாளரா கிய நம்மிடத்தில் இல்லை; அதுமுழுக்க முழுக் கப்பக்திநெறியினரிடத்திலேயே சிறப்பாக இருக்கக் காணலாம். முன்னேர்களிலும் சரி, இப்போதுள்ளவர்களிலும்சரி உண்மையை உணர்ந்து கொள்ளமுடியாத முட்டாள்கள் இருக்கவே செய்வர்; ஆனல் அனைவரையும் முட்டாள்கள் என்று ஒதுக்கிவிடமுடியாது. உண்மையை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அற்றேர் - சிந்திக்கமறந்தவர் - சிந்திக்க மறுப் பவர் - குருட்டுநம்பிக்கையாளர் என்ற திறத் தினரும் இருக்கவே செய்வர். அவர்கள் அனை வரையும் உண்மைமுற்றும் அறிந்த அறிவாளிகள் என்று கூறிடமுடியாது என் பதைத் திருக்கூட்டத்தார் உணரவேண்டும். நாம் மனித சமுதாயத்திற்குத் தெரிந்த உண்மை அறிவை அடிப்படையாகக் கொண்டு அலசிப்பார்க்கிறேம். உண்டு என்று தென்படு வனவற்றை "உண்டு" என்கிறேம்; அப்படி இல்லை என்று தென்படுவன வற்றை "அப் படிஇல்லை" என்கிறேம்; உண்மைக்குமாருக இருக்கிறது என்று புரிந்தும் குருட்டுத்தன மாக "உண்டு" என்று நம்பும் பழக்கத்தை நாம் கொள்ள வில்லை.

முன்னேர்களால் "உண்டு" என்று நம்பப் பட்டு வந்த பல, இப்பொழுது "அப்படி இல்லை" என்று ஆகிவிட்டன. முன்னேர் கள் 'உலகம் தட்டையானது' 'உலகை ஞாயிறு சுற்றுகிறது', 'கதிரவனையும் திங்களையும் இராகு கேது பாம்புகள் விழுங்குகின்றன', 'மேலே ஏழுஉலகம் கீழே ஏழுஉலகம் அடுக் கடுக்காய் உண்டு', 'அண்டத்தை ஆதிசேடன் தாங்குகிருன்', 'காலரா-வாந்தி-பேதி-அம்மை-பிளேக் ஆகியவை ஆண்டவனின் சாபத்தீடு கள்', 'பிள்ளைப்பேற்றைத் தடுக்கமுடியாது' போன்ற இவையெல்லாம் அப்படியே "உண்டு" என்றுதான் நம்பினர். இவற்றை யெல்லாம் "மிகமிகப் பெரும்பான்மையான மக்களும் அறிஞர்களும்" நம்பத்தான் செய்த னர். இப்பொழுது அவையெல்லாம் "அப்படி இல்லை" 'உலகம் உருண்டையானது', 'ஞாயிற்றை உலகம் சுற்றுகிறது', 'கதிரவனும் திங்களும்' 'திங்களாலும் உலகத்தாலும் மறைக்கப்படுகின்றன', 'உலகம் ஒரே சுற்றுப் பரப்புக் கொண்டதுதான், பதினன்கு அடுக் கைக் கொண்டதல்ல', 'அண்டம் எங்குமுடி கிறது எப்படிமுடிகிறது என்று இதுவரையில் யாருக்கும் தெரியாது', 'காலரா-வாந்தி-பேதி-அம்மை-பிளேக் ஆகியவைகளுக்குத் தொத்து நோய்க்கிருமிகளே காரணம்', பிள் ளைப்பேற்றை வேண்டும்போது வேண்டும் அளவுக்குத் தடுத்துக்கொள்ள முடியும்' என் றெல்லாம் உணர்த்தப்படுகின்றன.

உண்டு என்று நம்பப்பட்ட ஒன்று, "இல்லை" என்று தெளிவுபடுவது அறிவு வளர்ச்சியின் அறிகுறியேயாகும். மேற் சுட் டிக்காட்டப்பட்ட தவருன கருத்துக்களை "உண்டு" என்று நம்பிய முன்னேர்களை நாம் முட்டாள்கள் பட்டியலில் சேர்க்கவில்லை; அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களும் வச திகளும் மிகக்குறைவு, எனவே அவர்களுக்கு அவ்வளவுதான் தெரிந்தது என்றுதான் சொல்லுகிறேம். முன்பு இருந்த மனித சமு தாயத்தைவிட, இப்பொழுதுள்ள மனித சமு தாயம் மிகவான அறிவுடையது. மிகவான உண்மைகளை அறியும் என்பதை எவரும் மறுக்க இயலாது.

உள்ளபடியே சாக்ரடீஸுக்கு 'சப்மெரின்' (நீர்மூழ்கிக்கப்பல்) தெரியாது? ஏசுவுக்கு 'ஏரோப்ளேன்' (வானவூர்தி) தெரியாது; முக மதுவுக்கு 'மைக்' (ஒலிபெருக்கி) தெரியாது; புத்தருக்கு 'பென்சிலில்' (மருந்து)தெரி யாது; அப்பருக்கு 'ஆட்டம்பாம்' (அணுக் குண்டு) தெரியாது; பெரியாழ்வாருக்கு 'பௌண்டன்பேஞ' (மையூற்று எழுதுகோல்) தெரியாது; கம்பருக்கு 'கிராமபோன்' (இசைப்பெட்டி) தெரியாது; இளையான்குடி மாறநாயனுருக்கு 'எலக்டிரிக் லைட்' (மின் விளக்கு) தெரியாது. இவைகளெல்லாம் தெரியாத காரணத்தால் அவர்கள் எல்லாம் ஏதும் அறியாத முட்டாள்கள் என்று பொருள் அல்ல; இவைகளைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அறியாததை இந்த வகையில் நாம் அறிவோம். இவையெல் லாம் காலத்திற்குக் காலம் அறிவு வளர்ந் திருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறிக ளாகும்.

அறிவு வளரவளர சில பழைய நம்பிக்கை கள் குருட்டுநம்பிக்கைகளாகக் காணப்படுவது இயல்பு. இக்காரணம் பற்றிதான் கடவுளைப் பற்றிய சில பழைய நம்பிக்கைகள் அறி

வாராய்ச்சியின் முன்னிலையில் குருட்டு நம்பிக்கைகளாகக் காட்சியளிக்கின்றன. அத்தகைய குருட்டு நம்பிக்கைகளைத் தான் பகுத்தறிவாளராகிய நாம் களையச் சொல்கிறோம்.

'கடவுளு'க்கு ஐம்புலனறிவு உண்டு, உள்ளம் உண்டு, மனைவிமக்கள் வைப்புக்கள் உண்டு, மக்களின் வந்தனை வழிபாடுகளிலே விருப்பு உண்டு என்பன போன்று வைதீகர்கள் கூறும் கருத்துக்களை, நாம் " இல்லை " என்று கூறுகிறோம் என்றால், அதற்குக் காரணம், நாம் அல்லாத பிறரை முட்டாள்கள் என்று கருதுகிறோம் என்பதல்ல, நமது அறிவாராய்ச்சிக்கு அவை அவ்வாறு படுவதுதான்.

"உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து, அலகையா வைக்கப்படும்" என்ற திருக்குறளைச் சிந்தித்துப் பார்ப்பீர்களா? என்று அருள்நெறித் திருக் கூட்டத்தார் கேட்கின்றனர். நாம் அந்தத் திருக்குறளை நன்றாக முன்பே சிந்தித்துப் பார்த்திருக்கிறோம், பலதடவைகள் சிந்தித்துப் பார்த்திருக்கிறோம். எனவேதான் அறிவாராய்ச்சிக்குப் பொருந்திவராத-ஆனால் இதுவரையில் குருட்டுத்தனமாக நம்பப்பட்டுவந்த-கடவுளைப்பற்றிய சிலபல கருத்துக்களை "அப்படியில்லை" என்று கூறுகிறோம்.

உலகத்தார் என்றால் உயர்ந்தவர்கள் என்று பொருள். உயர்ந்தவர்கள் என்றால் அறிவால்-பண்பால் உயர்ந்தவர்கள் என்று பொருள். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது இலக்கணம். மேற்சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறளில் காணப்படும் 'உலகத்தார்' என்ற சொல்லுக்கு 'அறிவால் உயர்ந்தவர்கள்' என்றுதான் பொருள் கொள்ளுதல் வேண்டும். இன்றைய நிலையில் அறிவால் உயர்ந்தவர்கள் " உலகம் உருண்டை " என்றுதான் சொல்லுகிறார்கள். "உலகிற்கு உருண்டைவடிவு உண்டு' என்று அறிவால் உயர்ந்தவர்கள் சொல்ல, " உலகிற்கு உருண்டைவடிவு இல்லை ; அது பாய் போல் சுருட்டக் கூடிய தட்டைவடிவு கொண்டதுதான்" என்று பிடிவாதமாக நம்பும்படி யாரேனும் கூறுவார்களேயானால், அப்படிப்பட்டவர்கள், உலகத்தில், கற்பனைஉருவமான பேய்போல் வைத்து எண்ணப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். இதுபோன்ற நிலைமையைத்தான் மேற்சுட்டிக்காட்டப்பட்ட திருக்குறட் செய்யுள் தெளிவுபடுத்துகிறது. குருட்டுத்தனமாக "உண்டு" என்று நம்பும் ஒன்றை, அறிவாராய்ச்சியால் "இல்லை" என்று தெளிவுபடுத்திக்காட்டும் பகுத்தறிவாளர் போன்றவர்களைக் குறிப்பதற்காக அந்தக் குறள் இயற்றப்பட்டதாக அருள் நெறித் திருக்கூட்டத்தார் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களது அறியாமையைக் கண்டு நாம் எள்ளி நகையாடத்தான் வேண்டியிருக்கிறது!

* * *

வினா: திராவிடமுன்னேற்றக்கழகம் வகுப்புவாத இயக்கம் என்று கூறுகிறார்களே அது பொருந்துமா ?

விளக்கம்: பொருந்தாது. ஒரு காலும் பொருந்தாது. திராவிட முன்னேற்றக்கழகம் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பையும் (சாதியையும்) காப்பாற்றவோ, அதன் சுயநலத்துக்காகப் பரிந்து பேசவோ தோன்றிய இயக்கம் அல்ல. திராவிடத்தின் நலத்தைப் பற்றிக் கவலைப்படும் திராவிடத்திற்குரிய இயக்கமாகத்தோன்றி, சாதிவேற்றுமையற்ற, சமயப் பிணக்குகள் அற்ற, சமத்துவத்தன்மை பூண்ட சமுதாயத்தைத் திராவிடத்தில் காண அதன்பிறகு அந்த நிலையை உலகில் காண, அரும்பாடுபட்டுவருவதே திராவிடமுன்னேற்றக்கழகமாகும்.

ஒரு இயக்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்காக மட்டுமே தோன்றி, அந்தக்குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு, பிற வகுப்பினர் எவரையும் வகுப்பு அடிப்படையில் சேர்க்க மறுத்து வாழ்ந்து வருமேயானால் அந்த இயக்கத்தை வகுப்பு வாத இயக்கம் என்று கூறுவதில் பொருள் இருக்கமுடியும். திராவிட முன்னேற்றக்கழகத்தில், பிறப்பினால் எல்லா வகுப்புக்களையும் சார்ந்தவர்கள், ஆனால் கழகக் கொள்கைகளை உளமார ஏற்றுக்கொண்டவர்கள் உறுப்பினராகி யிருக்கின்றனர். பிறப்பினால் எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் கழகத்தில் உறுப்பினராகும் தகுதியுடையவரல்லர் என்பது போன்ற விதி எதுவும் கழகச் சட்டதிட்டத்தில் இல்லை. கழகக் கொள்கைகளை மனமார ஏற்று, கொள்கை வழி நடக்க இசைந்துள்ள நூற்றுக்கணக்கான பார்ப்பனர்கள் கழகத்தில் உறுப்பினராகி யிருக்கின்றனர். திராவிடத்தையே தாய்நாடாகக் கொள்ள இசைந்து, கழகக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள்ள இங்குள்ள வடநாட்டவர்கள் சிலர் கூட ஆங்காங்கு உறுப்பினராகியிருக்கின்றனர். இப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை வகுப்புவாத இயக்கம் என்று எவரேனும் கூறத் துணிகிறார்கள் என்றால் ஒன்று அவர்கள் வடிகட்டிய அறிவிலிகளாக இருக்கவேண்டும் அல்லது

வேண்டுமென்றே பித்தலாட்டம் புரியும் பொய்யர்களாகவும், யோக்கியப் பொறுப்பு அற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் புறக்கணிக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட - ஒதுக்கப்பட்ட வகுப்புகளுக்குப் போதுமான அளவு மிகவான சலுகைகள் கோருவது தவறுடைய தாகாது. கெட்டபெயர் கற்பிக்கப்பட்டுள்ள 'வகுப்பு வாதம்' என்ற சொற்றொடரை இத்தகைய கோரிக்கைக்குப் பயன்படுத்துவது பொருந்தாது. இத்தகைய கோரிக்கைகளின் அடிப்படையில் கழகம் வகுப்பு நீதியை வற்புறுத்தி வருவதை, மாற்றுக் கட்சியினர் 'வகுப்பு வாதம்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி மாசு கற்பிக்க முயலுகின்றனர். அப்படிப்பார்த்தால் 'அரிசனங்களு'க்குத் தனிச் சலுகைகள் கோரும் காங்கிரசும் ஒரு வகுப்புவாத இயக்கந்தான் என்று பொருள்படும்.

கழகம் சமுதாய சமத்துவத்திற்குப் பாடு பட்டுவருகிறதேயல்லாமல், எந்த ஒரு தனிப் பட்ட வகுப்பின் சுயநலத்துக்காகவும் பரிந்து பேசுவது அல்ல என்பதை நடுநிலையாளர்கள் நன்கு உணரவே செய்வர்.

பெருமையும் உயர்வும்

★

நாட்டில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் கண்ணுற்றுல், அவைகளின் காரணம் அறிந்துகொள்ள முடிவதில்லை. பொதுவாக, நீதிமன்றமும் மருத்துவநிலையமும் - ஊர்க்காவலரும் - ஆண்மைக்காரமும் ஏன் இருக்கவேண்டும் என்று சிந்தித்தால் நாட்டில் தீயனவும் நோயும், கவல்வாரும்; கருத்துக்கேடரும் இருப்பார்கள், இருந்தேவருவார்களென எடுத்துக் காட்டுவதோடு - வருங்காலத்தின் நிலையைப் படம்பிடித்துக்காட்டுவது போன்று இவை பல்கிப் பெருகிக்கொண்டும் இருக்கிறது. தவிரவும் இவற்றின் வளர்ச்சிகள் பாராட்டத்தகுந்த முறையில் இருக்கிறதெனப் போற்றவும் படுகிறது. இவற்றையெல்லாம் உற்றுநோக்க - நாம் நடந்து நடத்திச் செல்லவேண்டிய வாழ்வுப் பாதையைப் பற்றிக் கற்பனைகூடச் செய்து கொள்ளமுடியவில்லை. எனவே இந்தநிலை ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நலம் பயப்பதாயிராது என்பதனை அறிவறிந்தார் ஓர்ந்து, முதலின் தாந்தாம் - தத்தம் நடைமுறைகளைச் செப்பம் செய்து கொள்வதுடன், தம்மைச் சார்வாருக்கும் அவ்விதம் நடக்குமாறு எடுத்துக்கூறிச் செயற்படுத்துவார்களேயானுல், அது நாட்டிற்காம் நலனுக்கு அடிகோலுவதாகும். எம் நாட்டிலே போலீஸார் மிகுதி என்பது பெருமைதராது; எம்நாட்டில் மருத்துவ நிலையங்கள் மிகுதி என்பது உயர்வாகாது. மாருக போலீஸாருக்கே எம் நாட்டில் வேலையில்லை. மக்கள் நீதிமன்றங்களை நாடுவதில்லை. தங்களுக்குள் வழக்கு மேற்படுத்திக்கொள்வதும் எம்நாட்டில் கிடையாது என்று சொல்வதே பெருமையாகும் - உயர்வுந்தரும்.

தன்மதிப்பு இயக்கத் தூதுவர்

தன்மதிப்பு (சுயமரியாதை) இயக்கம் தமிழகத்திலே வலுப்பெற்று வளர்வதற்கு, மூலகாரணமாக இருந்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரிலே தோழர் கைவல்யம் குறிப்பிடத்தகுந்த ஒருவராவார்.

தன்மதிப்பு இயக்கத்தின் துவக்கக் காலத்தில் கடவுள்கள், மதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் பொதிந்துகிடக்கும் குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்கங்களையும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் அலசிக்காட்டி, இயக்கத்தை எதிர்த்து வெகுண்டெழுந்து நின்ற மதவாதிகள் புராணிகர்கள், புரோகிதர்கள், பண்டிதர்கள ஆகியவர்களெல்லாம் வாயடைத்துப்போய்ப் புறமுதுகிட்டு ஓடும்படிசெய்த பெருமையெல்லாம் தோழர் கைவல்யம் அவர்களையே சாரும்.

தோழர் கைவல்யம் அவர்கள் மேடை ஏறிப்பேசும் ஆற்றல் உடையவர் அல்லர்; அவர் மேடைஏறிப பேசியதில்லை என்னலாம். அவர் சிலரை முன்னால் உட்காரவைத்துக்கொண்டு மணிக்கணக்கில், நாட்கணக்கில் உரையாடல் நிகழ்த்துவதிலும், விவாதம் புரிவதிலும் மிக வல்லவர். அவர் இலக்கண இலக்கியங்களை மிகவாகப் படித்துத் தேர்ந்த புலமைமிக்கவரல்லர். எனினும் தேவையான அளவுக்கு இதிகாசப் புராணங்களையும் சாத்திரங்களையும் அலசிப்பார்த்தவர். அவர் தம் பரந்த அனுபவ அறிவைக் கொண்டுதான் வாதாடுவார். எதிரிகளை முன்னே வைத்துக்கொண்டு வாதாடும்போது அவரது கண்களிலே கனலும், சொற்களிலே காரமும் தெறிக்கும். வாதத்தில் அவரைவென்று திரும்பியவர்கள் யாரும் இல்லை. அவரது எழுத்து பண்டிதரும் பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் நனிஎளிமையதாக இருக்கும். ஆரம்பக் காலத்தில் "குடிஅரசு" இதழில் அவர் எழுதிய கட்டுரைகள், அவ்விதழுக்குத் தனிப் பொலிவையும், பெருமையையும் தேடித்தந்தன. அவரது கட்டுரைகளைப்படித்துப் படித்துப் பகுத்தறிவு இயக்கத்தினராக மாறியவர்கள் ஏராளமானவர்கள் ஆவார்கள். பரந்த அனுபவம், ஆழ்ந்த சிந்தனை, வாதிடும்திறன், முரட்டுஇயல்பு, பிடிவாதப் போக்கு, கொள்கைபற்று ஆகியவைகள் அவரிடம் சிறந்து காணப்பட்டன.

ஒருபோது அவர் ஏனம்பள்ளி ஜமீன்தார் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தாராம். சாப்பாட்டுப்பந்தியில், பரிமாறின பார்ப்பனன் ஒருவனைக் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது, அவன் பந்தியில் வைக்கப்பட்டிருந்த தம்ளரைக் கையில் எடுத்தானாம். உடனே பக்கத்திலிருந்த மற்றொரு பார்ப்பனச் சமையல்காரன் இந்தப் பார்ப்பனனைப் பார்த்து "ஏன்னடா மடையா? சூத்திரன் குடித்த தம்ளரைக் கையால் தொட்டுவிட்டாய்?" என்று சினந்துகொண்டானாம். உடனே தோழர் கைவல்யம், சாப்பிட்டுக்கொண்டிருந்தவர் எழுந்து, எச்சில் கையாலே அந்தப் பார்ப்பனனை ஒருஅறை செவுளில் அறைந்து "யாரடா சூத்திரன்?" என்று கேட்டாராம். அங்குஇருந்தோர் அனைவரும் திகைத்துப் போயினராம். அந்தப் பார்ப்பனன் தன் கூற்றுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டதற்குப் பிறகே தோழர் கைவல்யம் மீண்டும் பந்தியில் அமர்ந்தாராம். இப்படிப்பலப்பல நிகழ்ச்சிகள் அவரது வாழ்நாளில் ஏற்பட்டிருக்கின்றன.

அவர் சிறுவயதிலே வீட்டைவிட்டு வெளியேறிச், சாமியார் கோலம் பூண்டு, இந்தியாமுழுவதும் ஊர் ஊராகச் சுற்றியலைந்து திரிந்து அனுபவம் பெற்றவர். சாமியார் கோலத்தோடு வாழ்க்கையை நேரியவழியில் ஈடேற்ற வசதியாக இருக்கும் பொருட்டுச் சித்தமருத்துவத் தொழிலை மேற்கொண்டு அதில் பெரும் பெயர் பெற்று விளங்கினர்.

சித்தர்களுடைய அறிவுரைகள் அவருடைய சிந்தனையைப் பெரிதும், கிளறி அவரைப் பகுத்தறிவுவாதியாக ஆக்கின. அவருடைய நோக்கத்திற்கேற்ப தன்மதிப்பு இயக்கம் தோன்றவே, தீவிரமாக ஈடுபட்டுத் **தன்மதிப்பு இயக்கத்தின் சிறந்த தூதுவராக** நின்று நாட்டில் அரும் பணியாற்றிவந்தார்.

இரா. நெடுஞ்செழியன்

Regd- M 6296

"மன்றம்"

மலர் - 4. 1955 - 56

24 இதழ்கள் கொண்ட உயர்ந்த காலிகோ பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்

(இத்துடன் 1956 பொங்கல் சிறப்பிதழும் இணைக்கப்பட்டிருக்கிறது)

விலை ரூ. 8-0-0

([illegible] ரூ. 12-0-0)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 12 வீதம் அனுப்பவேண்டும்)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)